467

No. M. 2210

வருஷ சந்தா ரூ. 1-8-0

AUTHOR & PROPRIETOR }
வை. மு. கோதைநாயகி அம்மாள்
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

16 MAR 19..

# JEGAN MOHINI

மலர் 7 ஜகன்மோகினி இதழ் 4



தனிப் பிரதி அணா 3.

ஆ
வை2M,N124J5Ny
N30.7.4.
21002|

...மோகினி ஆபீஸ்,
...26, தோடித் தெரு,
...ருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

ஏழாவது ஆண்டு ! ஏழாவது ஆண்டு !!

# ஜகன்மோகினி.

இதன் 7-வது ஆண்டு 1929௵ டிசம்பர்௴ முதல் ஆரம்பம். இதில் **ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால்** எழுதப்பட்ட "**சாருலோசனா**" என்னும் அற்புதமான நாவலின் இரண்டாம்பாகமும், ஹாஸ்ய விநோதங்களும், அனுபவ நீதிகளும், காவியங்களும், இன்னும் மற்ற ருசிகரமான விஷயங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச் சந்தா உள்நாடு, வெளிநாடு இரண்டிற்கும் தபாற்கூலியுள்பட ரூ. 1-8-0 தான். "**சாருலோசனா**"வின் முதல்பாகம் சென்ற வாண்டின் கடைசி நான்கு சஞ்சிகைகளில் வெளிவந்ததால், புதிதாகச் சேரும் சந்தா நேயர்கள் எட்டணா கூடச் சேர்த்து ரூ. 2 அனுப்பினால், அவற்றை அனுப்புகிறோம்.

## சந்தா விவரம்.

(1) சந்தாத் தொகையை நமக்கு நேரில் முன்பணமாக அனுப்பியாவது, வி. பியில் பணம் கட்டியாவது அல்லது நமது கௌரவப் பிரதிநிதிகளிடத்திலும். ஏஜண்டுகளிடத்திலும் கொடுத்தாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகையை வி. பியில் **அனுப்புவதால் சந்தா நேயர்களுக்கு மூன்றணா அதிக செலவுண்டாதுமாதலால் முன்பண மனுப்புவதே நலம்.**

(2) இவ்வாண்டில் நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் புதிய நம்பரைக் கொடுப்பதால் இனிமேல் அவர்கள் எழுதும் கடிதங்களில் **புதிய நம்பரை** மறக்காமல் குறிப்பிடவேண்டும்.

(3) பிரதி ஆங்கில மாதமும் **கடைசித் தேதியில்** நமது பத்திரிகையை நாம் எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். ஒரு மாதத்து சஞ்சிகை அடுத்த மாதம் 15 **தேதிக்குள்** கிடைக்காவிட்டால் அது தபாலில் தவறிவிட்டதென்று தெரிந்து உடனே நமக்குத் தெரிவித்தால் வேறு சஞ்சிகையை அனுப்புவோம். அப்படிச் செய்யாதவர்களுக்கு, **மூன்றணா ஸ்டாம்பு** அனுப்பினால்தான் வேறு சஞ்சிகை அனுப்பப்படும்.

(4) இடம் மாறும் சந்தா நேயர்கள் தமது புது விலாசத்தை உடனே நமக்குத் தெரிவிப்பதுடன், தங்களுடைய புது விலாசத்திற்கு சஞ்சிகை சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்து **கொள்ளவேண்டும்.** அப்படிச் செய்யாது சஞ்சிகை தவறிவிடின் அதற்கு நாம் ஜவாப்தாரியல்ல.

(5) நமக்கு ஏஜண்டுகள் இல்லாத விடங்களில் **ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்கள் ஒரு வருஷ சஞ்சிகையை இனாமாகப் பெறுவதுடன் பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்**

**மானேஜர்.**

16 MAR 1931

## 14-வது அதிகாரம்.

### அன்பர் அகமே அன்பை அறியும்

கங்காதரனுக்கு 15 நாட்களுக்கு விடுமுறை கிடைத்தது. அந்த விடுமுறை நாட்களுக்கு வெளியூருக்குச் செல்லவேண்டுமென்று எண்ணி முன்னர் தீர்மானித்தபடியே இருவருமாக சென்னைமா நகரத்தை யடைந்தார்கள்; ஜெயமணியின் தோழியாகிய சின்னம்மாள் என்பவள் மைலாப்பூரில் இத்தது இருப்பதால் மகா சிரேஷ்டமான மயிலையை அடைந்து தன் தோழி வீட்டிற்குச் சென்றார்கள். ஜெயமணியின் வருகையால் சின்னம்மாளடைந்த இன்பத்தை அளவிடவியலாது. இருவரும் கட்டித் தழுவி அன்பு மிகுதியால் ஆநந்தக் கண்ணீர் பெருக்கிய வண்ணம் 10 நிமிடம் ஊமை போலானார்கள். சின்னம்மாளின் புருஷராகிய சாமிநாதர் என்பவர் கங்காதரனை அன்புடனழைத்து உபசரித்து உட்காரச்செய்து க்ஷேம லாபங்களை விசாரித்துப் பேசிக்கொண்டிருந்தார்.

சின்னம்மாளைக் கண்ட ஜெயமணி, "என் அன்பான சின்னம்மா! உன் திருமுகத்தைக் கண்டதும் எனது உள்ளமடையும் ஆநந்தத்தை அளவிட்டுச் சொல்ல வியலாது. என் அங்கம் பூரிக்கின்றது. இரவு பகலாக உன்னை எப்போது கண்டு களிப்போம் என்கிற ஏக்கமே என்னை வாட்டி வருத்திக்கொண்டிருந்தது. லீவு கிடைத்தவுடன் நேரே இங்குதான் வந்தேன். என்னுடைய தாயார் வீட்டிற்குக்கூட செல்லவில்லை. உனக்கு உடம்பு ஒன்றுமில்லையா! உன் புருஷர் சவுக்யமா! உன்னுடைய அம்ருதம் போன்ற கடிதத்தைக் காண்பதிலும், என் பர்த்தாவின் பணிவிடை செய்வதிலும், கடவுளைத் துதித்துப் பாடி ஆநந்தத்திலிருப்பதிலும், சாருகாஸனின் கடிதங்களைப் படிப்பதிலும் என்னுடைய பொழுது சுகமே கழிந்துகொண்டு வருகின்றது" என்று கூறினாள்.

A1002)

சின்ன :—என் கண்மணி போன்ற தோழீ! உன்னுடைய நினைவு இல்லாத சமயம் ஒருபோதேனும் இருந்தாலல்லவோ நான் மறப்பதற்கும், நினைப்பதற்கும். சதா என்னுடைய இருதயக் கோயிலில் ஒருபுறம் நீயும், ஒருபுறம் என் புருஷருமாக வீற்றுக்கொண்டிருக்கிறீர்கள். நான் நினைவில் எண்ணிய உன்னுடைய நினைவுகள் முற்றும் கனவிலும் தினந்தோறும் வருவதுண்டு. கனவின் தோற்றம் போலவே உன்னுடைய முடிவும் ஆய்விட்டதால் அவைகளை நான் எழுதுவதே இல்லை. ஒவ்வொரு சமயத்தில் உன்னைப்பற்றி நான் எண்ணிப் புலம்புவது கூறவியலாது. என்னையறியாது நான் பித்தம் பிடித்துவிட்டது போலாய்விடுவேன். உன்னுடைய சாருகாஸனும் நீயும் தம்பதிகளாகவே இருந்து களிப்பது போலான கனவுகள் பலதரத்தில் கண்டு சாற்றுணுச் சங்கடமடைவேன். இவ்வித கோலாகலங்கள் கனவிலும் இல்லையே என்று வருந்துவேன். உம். இம்மையை எவ்விதமேனும் ஒழித்து மறுமையிலேனும் நீ சந்தோஷத்தை அடைவாய் என்று நான் நம்பி கடவுளை வேண்டிக்கொண்டிருக்கிறேன். ஜெயமணி! நம்முடைய பேச்சிற்கு ஆதியுமில்லை; அந்தமுமில்லை. அவை வளர்ந்து கொண்டே போகும்: பிறகு பேசுவோம். முதலில் ஸ்நானம் செய்துவிட்டு போஜனம் செய்ய வாருங்கள்." என்று கூறிப் பின் கங்காதரரை நோக்கி க்ஷேமம் விசாரித்துவிட்டு அவரையும் ஸ்நானத்திற்கு வரும்படியாகக் கூறினாள்.

ஜெயமணியும் கங்காதரனும் ஸ்நானம் செய்து எல்லோருடனும் கூட போஜனத்தை முடித்துக் கொண்டார்கள். தன்னுயிர்த் தோழிக்கு (ப்ரெஸண்டு) பரிசாக வாங்கிக்கொண்டு வந்திருந்த தங்கச்சங்கிலியை வெற்றிலை, பாக்கு, மஞ்சள், குங்குமம், பழவகைகள் முதலிய சுபவஸ்துக்களுடன் வைத்து தட்டுடன் சின்னுவின் கையில் கொடுத்துப் பின் அந்த சங்கிலியைத்தானே எடுத்து "என்னருமை சின்னு! இச்சங்கிலி எவ்வாறு ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருக்கின்றதோ அதேபோல நம்முடைய உயிர் இருக்கும் பரியந்தம் நமது ஸ்நேகிதம் பிணைந்திருக்கவேண்டும் என்கிற நோக்கங்கொண்டு இதை உனக்குச் செய்துகொண்டு வந்தேன்."

இம்மாதிரியான செய்ன் கல்கத்தாவில் புதிதாக செய்கிறார்கள். வேறு எந்த ஊர்களிலும் இவ்வித மாதிரி பரவவில்லை. ஆதலால்; இதை உனக்கெனத் தயாரித்து வந்தேன்.'' என்று கூறிக்கொண்டே, தானே சின்னம்மாளின் கழுத்தில் அதைப் பூட்டினாள். தான் தைத்துக்கொண்டு வந்திருந்த ஸில்கு ரவிக்கையையும் அணிவித்தாள்.

ஜெயமணியினுடைய அன்பின் திறத்தையும், சிநேகித பிணைப்புக்கு சங்கிலி பிணைப்பை நிதர்சனங்காட்டி சொல்லிய வார்த்தைக்கும் உளங்களித்து உவகைபூத்து சின்னம்மாள் ஜெயமணியை நோக்கி "உன் மதிதான் என்ன நுட்பமாக விளங்குகின்றது! உன்னுடைய உபமான வார்த்தைகளுக்கு மெச்சிப் பூரித்தேன். கடவுளின் அருளினால் நமது கணவரும் நாமும் ஆயுளுடன் இருக்கவேண்டும். நமது அன்பும் சினேகமும் என்றும் அழியாதது. அவை நம்முடைய தேகம் அழிந்துவிடின் கூட அழியுமே யன்றி மற்றபடி பயப்படாதே! மணீ! பிரிந்தவர் கூடினால் பேசவும் கூடுமோ என்கிற பழமொழிப் படிக்கு நாம் சேர்ந்ததும் எத்தனையோ பேச்சுகள் பேசவேண்டும் என்ற ஆவலுடன் துடித்திருந்தேன். இப்போதோ ஒன்றுமே பேசமாட்டாது மனத்தில் ஆநந்தம் வந்து அடைத்து விட்டது'' என்றாள்.

பிறகு ஜெயமணியும் சின்னுவும் வெகு நேரம் வரையில் பேசிக்கொண்டே இருந்தார்கள். சாருகாஸன் எழுதிய கடிதத்தை ஜெயமணி சின்னம்மாளுக்குக் காண்பித்தாள். அதைப் படித்த அவள் கண்ணீர் பெருக்கினாள்; கலங்கினாள். பின்னும் பற்பல விஷயங்களைப் பற்றி ஓயாமல் இரவும் பகலுமாக 4-5-நாட்கள் பேசிய படியே அவர்கள் நாட்களைக் கடத்திவிட்டார்கள்.. அதற்குப் பிறகே ஜெயமணியும் சின்னம்மாளும் தமது சிநேகிதைபிடம் சென்று நாவல் எழுதும் விஷயமாக வெகு நேரம் பேசித் தனது சரித்திர வரலாற்றையும் சுருக்கமாகக் கூறி அதை எழுதித் தரவேண்டுமென்று அது சம்மந்தமாக சகல வித தீர்மானங்களையும் செய்துகொண்டு வீடு வந்தார்கள். பிறகு சின்னம்மாள், அவள் புருஷன், ஜெயமணி,

கங்காதரன் ஆகிய நால்வரும் சினிமா, சர்க்கஸ் முதலிய கண் காஷி களைப் பார்த்தார்கள். இவ்விதமே 10 தினங்களின் லீவும் முடிந்து விட்டது. மைலாப்பூருக்கு அருகிலுள்ள அடையாற்றையும் அதிலுள்ள தியஸாபிகல் ஸொஸைடியையும் பார்க்க ஜெயமணி ஆசித்த படியால் அங்கு செல்வதற்குத் தயாரானுள். சின்னம்மாளுக்கு அன்று ஏதோ அசுகமாய்விட்டபடியால் ஜெயமணியும் கங்காதரரும் மட்டும் அவ்விடம் சென்று வெகு நேரம் சுற்றி முற்றிலும் பார்த்துவிட்டு அங்குள்ள ஆல மரத்தண்டை வந்தார்கள். அந்த அற்புதமான ஆலமரத்தின் வெகு விசித்திரமான எழிலையும் வேலைப் பாட்டையும் கண்டு ப்ரமிப் படைந்த ஜெயமணி "ஆகா! இதென்ன அத்புதம்! இம்மாதிரியான ஆல வ்ருக்ஷம் ஜகத்தில் கண்டதாகக் கூறவும் கேட்டதில்லையே! ஒரு தாயின் வயிற்றிலிருந்து பிறந்த குழவிகள் கிளைத்துச் செழித்து பெருத்த குடும்பமாகி ஜொலிப்பது போல இவ் வால வ்ருக்ஷமானது தனது விழுதுகளைக் கொண்டே அனேக மரங்களாகி, பெருத்த கூடாரம் போலாய் விட்டதே! ஆகா! என்ன அற்புதம்! ஒவ்வொரு விழுதையும் தனித்த மரமாகும் படியாகச் செய்து அதை அருமையான வேலைத்திறத்துடன் ஒழுங்கு படுத்தி யிருக்கும் காட்சி கண்ணைக் கவருகின்றதே!" என்று கூறிக்கொண்டே அந்த மரம் எத்தனை தூரம் பரவி யுள்ளதோ அது வரையில் சுற்றிப் பார்த்துப் பேரானந்தங் கொண்ட வாறு, தாய் மரத்தினடியில் அமைத்துள்ள ஆசனத்திலமர்ந்தாள். கங்காதரரும் அவள் பக்கலில் அமர்ந்தார்.

ஜெயமணி இத்தகைய அற்புதமான சிங்காரங்களை எல்லாம் பார்த்துக்கொண்டே வருகையில் அவளை யறியாது அவளது எண்ணம் சாருகாஸனின் மீது தாவியது. "ஆகா! இத்தருணம் நமது சாருகாஸன் இவ்விடத்திலிருக்கலாகாதா!" என்ற எண்ணம் தானுக உதித்தது. மனம் பலவிதமான யோசனையினுல் சுழன்றது. கூற வியலாத சங்கடங்கள் தோன்றி வதைக்க ஆரம்பித்தன. கண்ணீரும் உதிரத் தொடங்கியது. அவள் அவ் வாசனத்தில் கற் சிலையைப் போல அமர்ந்தவாறு சோகத்தி லாழ்ந்துவிட்டாள். "என்னப்பனே! ஜகதீசா! என்னன்பான சாருகாஸனின் நினைவை அறவே மறந்து

விடக் கூடிய ஒரு அரு மருந்தை அளிக்கமாட்டாயா! அவன் யாரோ, நான் யாரோ! எமக்குள் வளர்ந்த ஓர் உயர்ந்த காதலையும் அவ்வாறே அகற்றி விடாது என்னை வருத்துவது தகுமா! ஒன்று என்னுயிரை அகற்றவேண்டும்; அல்லது என் மனத்திலுள்ள அவன் நினைவை அகற்றவேண்டும்; இரண்டு மில்லாமல் ஏன்னை என் இவ் விதம் வதைத்துக் கொல்லவேண்டும்? என் துயரை அறியவல்லான் நீ யன்றோ! எத்தனை நாட்களைத் தான் நான் இவ்விதம் கழிப்பேன்? என்னப்பனே! தீனதயாளா!

படமுடியாதினித் துயரம் படமுடியாதரசே பட்டதெலாம்
போது மிந்தப் பயந்தீர்த்திப் பொழுதென்
னுடலுயிராதியவெல்லாம் நீ யெடுத்துக்கொண்டுன்
னுடலுயிராதியவெல்லா முவந்தெனக்கே யளிப்பாய்
வடலுறுசிற்றம்பலத்தே வாழ்வா யென் கண்ணுள்
மணியே யென் குருமணியே மாணிக்க மணியே
நடன சிகாமணியே யென் நவமணியே ஞான நன்மணியே
பொன்மணியே நடராஜமணியே.

—திருவருட்பா,

சர்வலோக சரண்யா! இப்பாவியை இவ் வுலகத்தில் படைத்தது துன்பத்தைத் தாங்கும் சுமை தாங்கியாக நிற்பதற்கோ படைத் தாய்! இவ்விதமான துன்பத்தைப் பகிர்ந்துகொள்ளும் பொருட்டே எம்மிருவரையும் இப்பூவுலகின் கண் படைத்து வருத்தத்தை அடையும்படியாகச் செய்துவிட்டாயே! இந்த வருத்தத்தை நான் உன்னிட மல்லாது யாரிடம் முறையிடுவேன்? எவருக்கு உரைப் பேன்? எவரிடம் முறை யிட்டால் என் துயர் தீரும்? என்னுயிர் மாளும்? பிறரிடம் என் வருத்தத்தைக் கூறினால் அவர்கள் ஏளனமாக என்னை எண்ணி எள்ளி நகைபுரிந்து பரிசுத்தமற்றப் பாவை என்றல் லவா பரிகஸிப்பார்கள்! என்னிதயத்தின் பரிசுத்தத்தை நீ யன்றி மானிடர்கள் அறியும் வல்லமை யுண்டா! மணந்த மங்கை மற்றொரு வனை எண்ணுவது தர்ம விரோதமானதென்பதை உலகமறிவது போல பாவி யானு மறியமாட்டேனு! நான் எனக்கு மணமாகிய பிறகு நான் இவ்விதமான எண்ணங் கொண்டிருப்பேனேயாகில் அது மகா

பாதகமானதேபாகும். என்னுடைய அறிவு எனக்கறிந்த நாள் முதல் என் மனத்தில் இவ் வெண்ணத்தை வார்ஜித முறச் செய்த கர்த்தன் நீ யல்லவா! அதை நீயே யன்றோ மறக்கச் செய்யவேண்டும். நான் என்ன செய்வேன்? மனத்திற் குள்ளாக நான் படும் பாட்டை வெளியிடவும் பாவி யோக்பதை யற்று விட்டேனே! என்னுடைய மனமானது சதா காலமும்

1. எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணி எண்ணி ஏழை [நெஞ்சம்
புண்ணாகச் செய்ததினி போதும் பராபரமே!
2. எத்தாற் பிழைப்பேனோ வெந்தையே நின்னருட்கே
பித்தானேன் மெத்தவும் நான் பேதை பராபரமே!
3. தேடினேன் திக்கனைத்துந் தேண்ட மிட்டேன் சிந்தை [நைந்து
வாடினேன் என் மயக்கமாற்றாய் பராபரமே!

—தாயுமானர்.

உலகத்திலுள்ள சகலமான ஜீவகோடிகளில் என் போல பாவிகளும் துரதிர்ஷ்ட ஹீனைகளையும் நீ படைத்ததுண்டா! பரமனே! பாவி என்னும் பெயரைத் தாங்கி நிற்கவே பாவையாக என்னைப் படைத்தனையோ! நான் வேண்டுவதெல்லாம் உனக்குரைக்கவேண்டுமா! என்னுள்ளத்தை அறிந்துள்ளது உன் உள்ளம். என் மனத்திலுள்ள எண்ணத்தை மாற்றி என்னைப் புதுப்பித்து உன் பொன்னடியில் சேர்த்துக்கொள்ளவேண்டுகின்ற ஒரு வரத்தை யல்லவா நான் நாடுகின்றேன். அவ் வொன்றே எனக்குப் போதும்! அதொன்றை யளித்து என்னை உலக வசைக்கு இலக்காகாதபடிக்கு ஆதரிக்கமாட்டாயா! பேதை யான்—பாவி யான்—இந்த வேண்டுகோளை யின்றி மற்றொன்றும் வேண்டவில்லையே! இதையேனும் எனக்களிக்க உன் மன மிளக வில்லையா!என் நினைவு உன் மனத்தில்லையா! 'பாவி ஒருத்தியைப் படைத்துள்ளோம்; அவள் படும் துயரை ஆற்றவேண்டும்.' என்ற நினைவை நீயே மறந்திருப்பாயேயானுல் அதை உனக்கு நினைப் பூட்ட யார் வருவார்கள்? என் தாயான லோகமாதாவாகிலும் இந்த அற்ப காரியத்தில் அருள் செய்ய

லாகாதா! ராமதாஸருக்காகப் பரிந்த என் தாயான உனக்கு என் விஷயத்தில் நினைவற்று விட்டதுவும் என் பாப வினை தானே! ஏ, கமலலோசனி! ஜகத்ரக்ஷகி! அம்பிகே! நானும் உன் போன்ற பாவை என்பதை மறந்தனையா! நான் உன்னினம் (பெண்ணினம்) என்பதை எண்ணியேனும் எனக்கு இத்தறி ஆதரவளிக்க வரமாட்டாயா! ஏனோ என் மீது வர்மமா! பராமுகமா! பாவி எண்றெண்ணிப் புறக்கணித்துவிட்டாயா! என் தாயே!

ராகம் தோடி; தாளம் ரூபகம்.

(ப) நன்னுப்ரோவவே! தல்லீ! நளினலோசனீ! தேவி ந.

(அ) நின்னுநம்மின நாது பைநேர மிந்த சேயஜால
கன்னதல்லீ! கருணதோனு பின்னகா அபய மிச்சி ந.

(ச) ஆதிகஜலக்ஷ்மி நீது பாத முலோசரனு ஜோச்சி
ஆதரிம்பவேகோன்ன நாதுசிந்த தீர்சவம்மா ந.

என்னருமை அன்னாய்! என்னிடர் நீக்க இறங்காயேல் நின்னருளுக்கு என்னே பயன்? என் முகம் பார்க்க உன் மனம் கூசுவதேன்? என்னம்மணீ! தாயே!'' என்று தனக்குள்ளாகவே எண்ணுவதும் மெல்லப் பாடுவதும் கண்ணீர் பெருக்குவதுமாக அபாரமான சோகத்திலாழ்ந்து உட்கார்ந்திருக்கின்றாள்.

அங்கு வந்து உட்கார்ந்தது முதல் ஜெயமணி தன்னையே மறந்து சித்தம் சிதறி விசனமேலீட்டால் மனமுருகி உட்கார்ந்து யோசிப்பதையும், இடையிடையே மெல்லிய குரலால் பாடுவதையும், கண்ணீர் பெருக்குவதையும் கங்காதரர் அறியாமலில்லை. அந்த பரிதாபமான காட்சியைக் காண கங்காதரரின் மனமும் வேதனையடைந்து பொங்குகின்றது. அச்சமயம் ஜெயமணியை தான் தடுப்பதோ, கூப்பிடுவதோ கூடாது என்கிற நோக்கங்கொண்டு வாளாவிருந்த வண்ணம் அவள் பாடும் பாடலைக் கேட்டுக்கொண்டே இருக்கிறார். அந்த நிம்மதியுண்டாகும்படியான இடத்தில் யாருமில்லாமையால் அவள் மனவேதனை தீரும்படியாக அவளிஷ்டம் போல விட்டுவிட்டார். ஜெயமணி தன் மனப்போக்காகவே வருந்தி புலம்பியபடியே உட்கார்ந்திருந்தாள்.

நாம் முன்னதிகாரத்தில் தெரிவித்தது போல நமது சாரு காஸன் சற்றும் எதிர்பாராத விதமாக தன்னுயிர்க் காதலியைக் கண்டு கட்டுமீறிய ஆநந்தமடைந்து, "ஆகா! இந்த தருணீமணி என் கண்மணிதானு! ஜெயமணிதானு! என் காதல் கற்பகமணி தானு! என் இன்ப எழில்மணிதானு!....ஆம், ஆம். என் ஜெய மணியேதான். அடடா என்ன ஆச்சரியம்! என் மனம் தவிக்கும் நேரத்தில் என் மாமணியைக் கண்டு களிக்கச் செய்த எம்பெருமானின் கருணுகடாக்ஷத்தை என்னென்பேன்! ஏ, பரம்பொருளே! இவ்வாலமரத்தடியில் என் ஆரமுதைக் காணச்செய்த நின் பேரருளை என்னென்று கூறுவது? என்னப்பனே! ஒருகாலத்தில் உலகம் முழுகிய சமயம், ஆலமாமரத்தின் இலைமேல் ஒரு பாலகனுய் ஞால மேழு முண்டு களித்து உலகத்தை உய்வித்த ஒப்பரிய வள்ளலே! அவ்வமயத்தில் நீ அமர்ந்திருக்கும் பாக்கியத்தைப் பெற்ற உத்க்ருஷ்டமான இவ் வால மரத்தின்டியில் நான் இருப்பதால் என் மனத்தை மகிழச்செய்தாயா! ஆகா! என்ன அற்புதமான சம்பவம். என் கண்மணியும் மனம் வருந்திக் கசிந்துக் கண்ணீர் உதிர்த்த வாறிருக்கின்றுள். உம். அவளுக்கென்ற தனித்த விசனம் வேறிருக்கின்றதா! அவள் கடிதத்தில் எழுதியதுபோல தவிலும், மிருதங்கமும் போனுள்ள விஷயத்தைச் சிந்திக்க வேண்டுமா! கங்காதரரும் அருகிலிருக்கின்றபடியால் கூசாது எதிர் சென்று என் இன்பவடிவத்துடன் பேசலாம்." என்று எண்ணியவனுய் அங்கு ஜெயமணி வீற்றிருக்கும் இடத்திற்கு வெகு ஆவலோடு சென்றுன். அப்போது ஜெயமணி வீற்றிருந்த காக்ஷியானது மனமோகன சிங்காரவடிவழகாயிருந்தமையால் தான் அவளருகில் சென்றுல் அந்த மின்னுள் இத்திருக்கோலக் காக்ஷியை விட்டு எழுந்து விடுவாள் என்ற நோக்கத்துடன் ஒரு மரத்தின் மறைவிலிருந்து தன் மன ஆவல் தீரப் பார்த்தான். 'நேரமோ சென்று கொண்டே இருப்பதால் இனியும் தாமதித்தால் பேசும் பாக்யம் இழந்து விடுவோம்' என்று எண்ணியவனுய் மீண்டும் பரமாநந்தத்துடன் ஜெயமணியும், கங்காதரரும் உட்கார்ந்திருந்த சோபாவின் அருகில் சென்று அவர்கள் வியப்புறும் வண்ணமாக நின்று "நண்பரே! வந்தனம். ஜெயமணீ! உன்னையே மறந்து என்ன யோசனை செய்கின்றுயம்மா!" என்றுன். அதற்கு

மேல் அவனாலும் பேசக்கூடாதபடி வருத்தம் வாயடைத்து விட்டது. ஜெயமணியைப் பார்த்தவண்ணமாக நின்று விட்டான்.

தான் ஒரு சிறிதும், கனவிலும் கருதாதபடிக்கு அங்கு சாருகாலன் வந்து நின்றதையும், வந்தனம் செய்ததையும் கண்ட கங்காதரன் கூறவியலாத அபாரமான வியப்புடன் "ஆகா! இதென்ன ஆச்சரியம்! சாருகாஸரே! நான் காண்பது உண்மையா!" என்று கூறிக்கொண்டே எழுந்து சாருகாஸனைத் தழுவிக் கொண்டார். அதே தருணம் ஜெயமணி சாருகாலனின் குரலைக் கேட்டு திடுக்கிட்டு ஆச்சரியமும், ஆநந்தமும் ஒருங்கே அடைந்து திடீரென்று எழுந்து "ஹா! சாருகாஸா! இதென்ன விசித்திரம்! லாகூரிலிருந்து நீ இத்தருணம் எவ்விதம் இங்கு வந்தாய்?" என்று கூறியவாறு அபாரமான ப்ரமிப்புற்று வியப்பே வடிவாக நின்றாள். இருவருடைய விழிகளும் ஒன்றோடொன்று தாக்கிக்கொண்டு மனத்தினுள் ஊடுருவியும் பாய்ந்துவிட்டன. அடுத்த க்ஷணத்தில் இருவருடைய தலைகளும் பூமிதேவியை நோக்கின. பூமாதேவிக்கு நன்முத்துக்கள் போன்ற கண்ணீர் முத்துக்களால் அலங்காரம் செய்வித்தார்கள். 5 நிமிடங்கள் வரையில் ஒருவரும் பேசாது மவுனியானார்கள். ஜெயமணிக்கோ அப்போதுண்டான பேராச்சரியத்திற்கு அளவே இல்லை. இப்போதே தான் கடவுளை வேண்டி வருந்திக்கொண்டே இருக்கையில் கணப்பொழுதில் தன் சாருகாஸனைக் கண்டு களிக்கும்படி செய்த அந்தக் கடவுளின் திருவருளை எண்ணி மகிழ்ந்தாள்.

என்னுருயிரே! எனது கண்மணியே!
முன்னோர் மகிழும் மூவுலகரசே!
உன்னருள் செயலை உளத்தறிந் தோருவர்
நன்னயமுடனே நவிலவும் போமோ!

என்று தனக்குள் கடவுளை துதித்துப் பாடினாள். சாருகாஸனை நமஸ்கரித்தாள். இதற்குள் கங்காதரர் சாருகாஸனையும் அவ்வாஸனத்தில் உட்காரச் செய்தார். ஜெயமணி அவ்வாசனத்தைக் கையில் பிடித்தவாறு நின்றாள்.

OF THE REGISTR 16 MAR 1931

சாருகா :—நண்பரே! சகர்தானு! ஏது இப்பக்கம் வந்தது?

கங்கா :—நான் லீவுக்காக வந்தேன். இந்த லீவுடன் பின்னும் சில மாதங்களுக்கு லீவு வாங்கிக்கொண்டு பிஞ்சன் வாங்கிக்கொள்ள வந்தேன். தாங்கள் இப்படி வந்தது மிகவும் வியக்கத்தக்கதாக விருக்கின்றதே! தம் பெற்றோரிடம் வந்தீர்களா!

சாரு :—உம். பெற்றோராவது, உற்றோராவது, அதுவெல்லாம் இல்லை. என்னுடைய நண்பன்—ஏன். உங்களுடைய தம்பியின் மாப்பிள்ளையாயிருந்த—சந்திரகாலனுக்கு நேற்று இவ்வூரில் விவாகமாயிற்று. எனக்கு இரு வீட்டாரும் சிநேகிதமாகையால் அதற்காக வந்தேன்.

கங்கா :—என்ன! என்ன! ராதாபாயின் புருஷனுக்கா! ஏன்! அந்த தடிச்சிலை தள்ளிவிட்டாரா?

சாரு :—உங்களுக்கு விஷயமே தெரியாதா! (ராதாபாயின் சகல விஷயங்களையும் கூறி) இவ்விதமல்லவா முடிந்து விட்டது. ஆகையால் விவாகமாயிற்று. நான் இதுபரியந்தம் இங்கு வந்ததில்லை. சமீபத்தில் வந்ததால் இவ்விடம் பார்க்கலாமென்று வந்தேன்.

கங்கா:—அப்படியா! இவ்விதமான அலங்கோலமாகவா முடிந்து விட்டது. நாங்கள் அந்த பைசாசத்தின் உறவையே விட்டு விட்டோம். எங்களுக்கு அவர்களுடைய நடத்தையே பிடிக்கவில்லை. அவலமாக நடந்தது அப்படியே அவமானமாகவே முடிந்து விட்டது." என்று அவர் பேசிக்கொண்டே இருக்கையில் அங்கு சிறிது தூரத்தில் அவருடைய பழய சிநேகிதர் ஒருவர் வரக் கண்டதும் சாருகாஸனை நோக்கி, "நண்பரே! இதோ வந்துவிடுகிறேன். நீர் ஜெயமணியுடன் பேசிக்கொண்டிரும். என்னுடைய நண்பர் அதோ வருகிறார். நான் சென்று வருகிறேன்." என்று கூறிக்கொண்டே எழுந்து அந்த நண்பரிடம் சென்று விட்டார்.

தெய்வச் செயலாக தனித்திருக்க நேர்ந்த அக் காட்சியானது

[library stamp]

இருவருடைய மனத்திற்கும் எவ்வாறிருக்கும் என்பதை நம் வாசகர்களே யூகித்தறிய விட்டு விட்டோம்.

சாரு :—ஜெயமணீ! ஏன் நிற்கின்றாய்! இப்படி உட்காரலாகாதா! உன்னைக் காண்பதற்கு முன்னர் உன்னோடு எவ்வளவோ வார்த்தைகள் சம்பாஷிக்கவேண்டி மனது பெருத்த ஆவலினால் அலைகின்றது. எதிரில் வந்த பிறகோ, ஒன்றுமே தோன்றாது சித்தம் சிதறிவிடுகின்றது. என்னன்பான மணீ! என்ன யோசிக்கின்றாய்?

ஜெயமணி :—(ஆசனத்தில் அமர்ந்து பின் பேசத் தொடங்கி,) "சாருகாஸா! நீ எங்களிடம் சொல்லிக் கொள்ளாமல்தான் செல்ல உத்தேசித்தனையே! அந்த கடிதத்தை எப்படிதான் எழுதினாயோ! பாவியிலும் கொடிய பாவியாகிய என்னை ஆயிரத்து எட்டு மணி என்று வர்ணிக்கவும் உன் மனம் வந்ததா! மணியா நான்! மணியாக விருப்பின் ஒளி குன்றாது ப்ரகாசிக்க மாட்டேனா! அது கிடக்கட்டும். சாருகாஸா! நான் இப்போதே உன்னை எண்ணி உள்ளம் நொந்தழுதேன். என் கண் முன் உன்னைக் கடவுள் நிற்கச் செய்த அதிசயத்தை என்னென்பேன்? சந்திரகாஸனுக்கும் விவாகமாயிற்று. உன் கதி என்ன?

சாரு :—ஜெயமணீ! உன் மனந்துணிந்தா இக்கேள்வியைக் கேட்கிறாய்? நீயுமா என்னுள்ளத்தை யறியாது பேசுகின்றாய்? உம். என்னாரமுதைக் கண்ட கண்களால், மகிழ்ந்த மனத்தால், பற்றிய கரத்தால், தழுவிய தேகத்தால், எண்ணிய எண்ணத்தால் மற்றொரு நங்கையை நான் சிந்திப்பதா! அனுபவிப்பதா! சீச்சீ! அதைவிட கேவலம் ஒன்றுண்டா! என்னுடைய வெந்த மனத்தை—நொந்த மனத்தை—இன்னும் புண்படச் செய்யாதே! என் மணீ! என்னுடைய நிலைமையை நீயறிந்ததுபோல மற்றையோர் அறிவார்களா! நீயே என்னைப் பரிகஸிப்பது போலக் கூறினால் நான் என்ன செய்வேன்? உன்னை நான் நேரில் கண்டு என்னுடைய விருப்பப்படிக்கு பலவித மணிகளாக அழைத்து ஆநந்திக்கும் பாக்கியம் கிடைக்காவிடினும் நான் கடிதத்தில் எழுதியேனும் களிக்கலாகாதா!

அதற்கும் பஞ்சமா! மணி! உன்னுடைய தேகமேன் இவ்விதம் மெலிந்து விட்டது? அதிகப்படியான நோய் ஒன்றுமில்லையே!

ஜேய :—என்ன கேள்வி கேட்கிருயப்பா! உனக்கு சொல்லிய வார்த்தை எனக்கில்லையா! எனக்கு இன்னும் புதிய புதிய நோய்கள் பாக்கி இருக்கின்றனவா! நீயோ டாக்டர், எல்லாமறிந்தவன்; உனக்கே நோயின் குணம் தெரியாவிட்டால் பிறர் தெரிந்து கொள்ள வியலுமோ!

சாரு :—கண்மணீ! ஐயோ! என் வாய் தவறி வந்துவிட்டது. கோபிக்காதே! இனி இவ்விதம் அழைக்கமாட்டேன். ஜெயமணீ! உன்னைப் பார்த்தால் மனேவ்யாதியுடன், புதிதாக நோயும் சேர்ந்திருப்பதாகத் தெரிகின்றது. அதாவது இருமல் நோய் பீடிப்பது போல உனது முகத்தைப் பார்த்தால் தெரிகின்றது. அவ்விதம் ஏதேனும் உண்டா?

ஜேய :—உம். இருமல் நோய் வந்து சற்று குணமென்றுதான் சொல்லவேண்டும். பாழாய்ப்போன நோய் எதுவோ ஒன்று வந்து என்னை விழுங்கிவிடலாகாதா! என்னல் இவ்வுலகத்திலிருக்கக்கூடவில்லையே! நான் என்ன செய்வேன்? மனேவேதனைக்கு முன்னல் பாப புண்ணியங்களும் கண்ணிற்குத் தெரியவில்லையே! என்னருமை சாருகாஸா! நான் எத்தனை விதத்தில் என் மனத்தைத் தேற்றிக் கொண்டாலும் என்னுடைய அகக்கண் முன்னல், அந்தரங்க வீட்டில், உன்னுடைய அழகிய உருவமல்லவா சதா தாண்டவம் செய்கின்றது. பாவி மனம் எண்ணுததும் எண்ணி ஏங்குகின்றதே! மனம் சுழலுக்குக் கடலையும் நிகராகக் காணப்படவில்லையே! நானே விவாகமாகிய நங்கை; என் மனத்தில் அன்னிய புருஷனுகிய உன்னை நினைப்பதும், உன்னுருவைக் காண்பதும் பாவமல்லவா! நீ எழுதியது போல அதைத் தெரிந்தும் நான் அவ்வகையான பாபத்திலிருந்து விடுதலை பெறமாட்டாது தவிக்கின்றேன். சாருகாஸா! நமது முடிவுதான் என்று நேருமோ!

சாரு :—உம். ஜெயமணீ! என் முடிவுதான் அன்றே—உனக்கு விவாகமான அன்றே—தீர்ந்து விட்டதே! இன்னும் வேறு விதமான

முடிவும் இருக்கின்றதா! இனிமேல் காலனுக்கு அடிமையாகும் முடிவைத் தவிர வேறு முடிவு கிடையாது. இதற்குள் எனக்கு அப்பாக்கியமும் கிட்டுமோ! இன்னும் என்னென்ன பாதைகள் படவேண்டுமோ! எத்தனை துன்பத்திற்குள்ளாக வேண்டுமோ! என்னால் நான் சுகப்படா விடினும் பிறருக்கும் சுகமின்றி துன்புறச் செய்யும் பாபம் இன்னும் எத்தனை சேருமோ! என்னால் முதலில் நீயும், பிறகு என் பெற்றோரும் தீராக் கவலைக்கு இருப்பிடமாகியது போதாவென்று மற்றுமொரு புதிய வெள்ளம் வந்திருக்கின்றது. (பத்மலோசனு செய்தியை உரைத்து) அந்த மாதிற்கு ப்ரக்ஞையே இல்லாது ஜுரம் வந்து விட்டது. இந்த பரிதாபத்தைக் கண்டு சகிக்கவும் கூடவில்லை. இந்த தரும சங்கடத்திற்கு என்ன செய்வேன்? என்னுடைய பிறவியே இவ்விதமாய் விட்டது பார்த்தனையா?

ஜேய :—ஆகா! இது கேட்க துக்கமாகவே இருக்கிறது. நீ ஏன் அந்த மாதை மணம் செய்துகொள்ளலாகாது? அவள் எழில் மிகுந்த நங்கைதானே! மேலும் லேடி டாக்டர் என்றும் கூறுகிறாய். ஆக்ஷேபனை யாது? ஏன் விட்டு விட்டாய்?

சாரு :—ஜெயமணீ! என்னை நீ பரிகஸிப்பது போலவே தோன்றுகின்றது. என் மனத்தை மருக வைக்காதே. என்னுடைய சுகமும், சந்தோஷமும் மடிந்து விட்டன என்பது நீ அறிந்தவையேயாம். என்னை இவ்வாறு நீ சோதிப்பது தருமா! என் கண்ணே! மணீ! ஏற்கெனவே புண்பட்டு வருந்தும் மனத்தை நீயும் வேகச் செய்யாதே! என்னுள்ளம் தவிப்பதை நான் என்னவென்றுதான் கூறுவேன்?

ஜேய :—என் அன்பான சாருகாஸா! கண்ணீர் விடாதே! கலங்காதே! நானு உன்னை சோதிப்பேன்—பேதிப்பேன்—வேக வைப்பேன்—அவ்வாறு நினைக்காதே! நீ கண் கலங்குவதைக் கண்டால் என்னுள்ளம் பற்றி எரிகிறது. சகிக்க வியலாத சங்கடம் உண்டாகின்றது. சாருகாஸா! உன்னுடைய மனவலிமையை—உறுதியைக்—கண்டேன். அவ்வாறு கண்டறிவதால் துன்பமும், இன்

பமும் கலந்து பாதிக்கின்றன. ஏனெனில் பாவி நான் பிறருக்கு அடிமையாகி விட்டதால் என்னுடைய விதி வேறுவிதமாக முடிந்து விட்டது. நீ சொல்லிய நங்கையே வலிய உன்மீது காதலுற்றுக் கலிதீராது போவதும் தர்மமா! அவளுடைய நிலைமையை எண்ண பொறுமையே இல்லை. நான்தான் பாவியாய்விட்டாலும் அந்த மாதரசியாவது உன்னால் மகிழ்ச்சியடையலாகாதா! அவளாலேனும் நீ சந்தோஷமாக விருக்கலாகுமே என்றும் தோன்றுகின்றது. என் னிலைமையால் நான் வருத்தமடைந்தாலும் பிறர் சுகப்படக் கண்டு களிக்கும் பாக்கியமேனும் கிட்டுமோ என்று எதிர்பார்க்கிறேன். நான் இவ்வார்த்தையைச் சொல்லும்போதே உனது முகம் மாறு படுவதையும் அறிந்தேன். உன் மனவிரோதமாக உன்னை நடக்கும் படியாக நான் வற்புறுத்தவில்லை. விசனிக்காதே! சாருகாஸா! மகா கொடிய பாவியாகிய என்னாலல்லவா உன் காலம் முற்றும் கண்ணீ ருடன் கலங்க நேர்ந்துவிட்டது. உண்மையில் யோசித்துப் பார்த் தால் நாம் இருவரும் ஏன் இவ்வுலகத்திலிருக்க வேண்டு மென்றும் தோன்றுகின்றது. நான் இறந்து விட்டால் நீ தபிக்கப்போகின் றாயே என்ற எண்ணத்தினால் நான் இருக்கிறேன். அதே எண் ணத்துடன்தான் நீயுமிருக்கிறாய். இருவரும் ஏககாலத்தில் தற் கொலை செய்துகொண்டு உயிர் துறந்தால்தான் என்ன? அந்த ஒரு விஷயத்திலாவது நாமிருவரும் ஒன்று சேர்ந்து எமனுலகமோ, நரகலோகமோ எங்கேனும் செல்லலாமல்லவா! நமது இப்பிறவி யின் துன்பமும் நீங்கிவிடும். நம்மை இச்சங்கடத்திற்கு உள்ளாக் கிய பாவிகள் அவ்வருத்தத்தை அடைந்து வெதும்பி நாசமாய்ப் போகட்டும். என் வயிறும் உடலும் பற்றி எரிகின்றன. அந்த ஆத்திரத்தினால் வாயில் வந்தவாறெல்லாம திட்டிவிடவும் மனம் துணிகின்றது. சாருகாஸா! நாம் பிறவி எடுத்ததே அபாரமான பாபத்தைச் செய்து பாப உருவமாய் பிறந்து விட்டோம். அதோடு இன்னும் சேர்த்துக்கொள்வது போல தெரிந்தே செய்கிறேன். என் கணவருடைய பரம சாத்விக குணத்தினாலும், தயாளத் தன்மையி னாலும் நான் உன்னோடு சகோதரி போல வீற்றிருந்து பேசுவதற் கேனும் பாக்கியம் செய்தேன். இதை எண்ணித்தான் சந்தோஷ மடைந்து காலத்தைத் தொலைக்கவேண்டும்.

சாரு:—கண்மணீ! நீ கூறுவது முற்றும் உண்மையே! நான் பல முறைகளில் தற்கொலை செய்துகொள்ள முயன்றேன். உன்னுடைய பிற்கால கதியை எண்ணியும், என்னுடைய பெற்றோர்களை எண்ணியும் நான் அந்த செய்கையிலிருந்து விலகிக் கொண்டேன். நீ சொல்லியது போல நாமிருவரும் ஒரே சமயம் இறந்துவிடும்படியான அருளைக் கடவுள் நமக்கு அளித்துவிட்டார் என்றால் நம்மைப் போன்ற பாக்யசாலிகள் இவ்வுலகில் எவரு மில்லை என்று நான் திட்டமாகக் கூறுவேன். ஜெயமணீ! நீ எழுதி யிருந்ததுபோல நமக்கு ஓர் முடிவு எப்போது வரும் என்று நான் வெகுவாய் யோசித்தும் ஒன்றும் தெரியவில்லை. என் இன்ப வடிவே! நான் இங்கு வந்த சற்று நேரத்திற்கு முன்னுலும் கூட உன்னை நான் சந்தித்துப் பேசுவேன் என்று கனவிலும் கருதவில்லை. கடவுளின் கருணையினுல் சற்றும் எதிர் பாராத இந்த பேரானந்தமேனும் கிடைத்தது பற்றி மெத்த பூரிக்கின்றேன். உன் கணவர் இன்னும் வரவில்லையே! அவர் ஏதேனும் நினைப்பாரோ!

ஜெய:—சேச்சே! அவரை அவ்வாறு எண்ணுதே! அவருடைய உண்மைக் கருத்தை நானறிவேன். நாம் தனித்துப் பேசும் பொருட்டே அவர் சென்றிருக்கிறுர். அவருடைய அபாரமான அன்பை நீ யறியமாட்டாயா! தலைவிதி கோணலாய் விட்ட பின்னர் தனித்துப் பேசினுலென்ன, பகிரங்கமாகப் பேசினுலென்ன, எல்லாம் ஒன்றுதான். கடவுளுக்குப் பொதுவாக நாம் பரிசுத்தமாக —களங்கமின்றி—நடக்கவேண்டும். அதொன்றுதான் முக்கியம். சாதாரண பாமர ஜனங்களுக்கு நீயும் நானும் இப்போது பேசுவதும் விபரீதமான தப்பிதந்தான். அது உலகத்தின் அனுபவம். எல்லாம் வல்ல இறைவன் ஒருவனுக்கே நம்முடைய பரிசுத்தத் தன்மையும், தூய எண்ணமும் தெரியும். ஆதலால் அவனடி சிந்தித்து அவனுடைய ஆணைப்படிக்கு நான் நடக்கின்றேன். இதைக் கண்ட உலகம் நகைத்தாலும்—பகைத்தாலும்—கடவுள் பார்த்துக் கொள்வார். எனது கனவிலும் நான் இனி துர் எண்ணங்கொள்ள மாட்டேன். என்னுவி போவதாயினும் தீய காரியத்தைச் செய்ய முன் வரமாட்டேன். இதோடு என்னுயிர் நீங்கினும் சம்மதமே!

எல்லாம் இறைவனின் அருள். அவனறியாத விஷயம் எதுவுமில்லே. மதிள் காவல் உபயோகமில்லே. அந்த மாயவன் இல்லாத இடமில்லே யாகையால் எந்த நேரத்திலும், எந்த விடத்திலும் எந்த நிமிடத்திலும் எந்த மனிதர்களின் செய்கையையும் அவன் கவனிக்காதவனில்லே; கவனித்துக்கொண்டே தான் இருக்கிறுன். அவனேயே நான் நம்பி யிருப்பதால் என்னுடைய ஒவ்வொரு வார்த்தையும், செய்கையும் அவன் உத்தரவென்றே எண்ணி இருக்கிறேன். அவன் மனமிரங்கி என்னே அவன் கழலடியில் சேர்த்துக்கொண்டால் அதுவே போதுமானது.

சாரு:—கண்மணி! என்னே யறியாது என் வாயில் கண்மணி! என்றே வந்துவிடுகிறது; என்ன செய்வேன்? கடவுளின் அனுக்கிரகத்தினுல் நம்மிருவரின் எண்ணங்களும் மனப் போக்கும் ஒன்ருகவே இருப்பது எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. நீ கூறிய படியே என்னுடைய அபிப்ராயமுமாகும். வாழ்க்கை நலத்தில் நாம் பிரிக்கப்பட்டுவிட்டோமே யன்றி மற்றபடிக்கு சகல அம்சங்களிலும் நம்முடைய போக்குகள் சிறிதும் முறண்படவில்லே. உம். எத்தனே தரம் சொல்லியபோதிலும், எத்தனே நேரம் பேசிய போதிலும் நம்முடைய விதியை வெல்லக் கூடுமோ! அது ஒருவராலும் ஆகாது. திருப்பித் திருப்பி புலம்புவதையும், பேசியதையே பேசிக்கொண்டிருப்பதையும் தவிற வேறு ஒன்றையும் காணவில்லே. நம்முடைய பிறவி நமக்கே பிடிக்கவில்லே. இவ்விதம் வெறுப்புடன் எத்தனே நாளேக்குத் தான் தொலேக்கவேண்டுமோ தெரியவில்லே.

ஜேய:—சாருகாஸ! அன்று நம் தலேயில் எழுதிய எழுத்தை இன்று மாற்றிட வல்லவருண்டோ! அவ்வித நன்மையும் அவனியிலிருப்பின், அலறித் துடித்திடும் விதி தான் அணுகுமோ! உம்பாவும் கதையாகிய பின்னர், சாவைத் தவிற நற் சந்தோட மில்லே. அத்தனின் அருளால் அந்த நாள் வந்திடில் மெத்த களித்து மகிழ்ச்சியே அடைவோம். சித்தம் சிதறி செயலற்ருலும் தத்தம் வினையைத் தாமே தொலேக்கவேண்டும் அல்லாது வருவரோ மற்றவர். முற்பவம் இயற்றிய வினேயே முற்றும் பிற்பகல் நம்மைப் பாழ்படச் செய்தது. வினையை எண்ணி மனத்தை நொந்து தினத்

தைக் கடத்தி சென்மத்தை யொழித்தால் கன்மம் நீங்கி மறுமை யிலேனும் களிப்புண்டாமோ அறிகிலேன் பாவி.

சாரு:—கண்ணே! உனது கருத்துரை விண்டேன். விண்டென் பயன்? சொல் விண்மடமானே! அண்ட பிண்டாண்டமும் அளந் திட்ட மாயனின் அருளிது என்றதை அகத்தினில் கொண்டு பொறுமையை வகித்து புவனியில் சிறிது புண்ணிய மியற்றி புனித மடைந்திடப் பாவி மனத்தில் மேவிய எண்ணம் பிறப்பதை ஈசன் பூர்த்தி செய்வரோ! அதிலும் எனது பாபமே அணுகி அபஜெய மளித்து அநாதரித்திடுமோ! ஜெயமணீ! நாம் சமார் ஒரு யுகம் பூராவும் பேசிக்கொண்டே இருப்பினும் நம்முடைய பேச்சும் ஓய்ந் திடாது; ஆவலும் தீர்ந்திடாது. பொழுது போவதும் தெரிந் திடாது. மகா கொடிய பாதகத்தை மனந் துணிந்து முற்பவத்தில் செய்துவிட்டதை இப்போது அனுபவித்துத் தான் தீரவேண்டும். உம்....என் கண்மணீ! எனக்கு ஒரே ஒரு சிறு ஆசை இருக்கின்றது. அதேனும் பூர்த்தியாகுமா! என்று உள்ளம் ஏங்குகின்றது. அதா வது,—நான் உனக்கு முதலில் அளித்த வைர மோதிரம் என் னிடமே திரும்பி விட்டதல்லவா! அந்த மோதிரத்தை மீண்டும் உன் விரலிலேயே பூட்டி அகமகிழ எண்ணுகிறேன். அந்தப் பேறு கிடைக்குமா! அது உனக்குச் சம்மதந்தானா!

ஜெய:—ஐயோ! சாருகாஸா! உனக்கென்ன பயித்தியம் பிடித்துவிட்டதா! அந்தப் பாழாய்ப்போன மோதிரமே நம்முடைய போதாக் காலக் குறிப்பை முதலில் எடுத்துக் காட்டியது. அந்த மோதிரத்தைக் கண்டாலே என் வயிறு எரிகின்றது. எத்தனையோ அன்புடன் என் கையில் நீயே பூட்டிய மோதிரத்தைப் பாவி நானே கழட்டிக்கொடுக்கும்படியான சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டது. இனி அம் மோதிரத்தைப் பற்றி ஏன் எண்ணுகிறாய்? உன்னுடைய அன்பு ஒன்றுதான் எனக்கு ப்ரதானமே யன்றி மற்றது எனக்கு அவசிய மில்லை. எனக்கு உன்னிடம் பொருள் வாங்கும் இஷ்டம் சிறிதும் இல்லை. பாழாய்ப் போன செல்வம் எனக்கிருப்பதை ஆளவகை யற்று—நாதி யற்று—அலையப் போகின்றது. அதோடு உன் பொருள் எனக்கெதற்கு? நான் பொருளுக்கு ஆசைப்படும்

வேசைபா! அதில்லை. எனக்குக் கொடுக்க எண்ணும் மோதிரத்தை விற்று நாலு ஏழைகளுக்கு தானமாகக் கொடுத்துவிடு. எத்தனை மேன்மையான புண்ணியம் கிடைக்கும் தெரியுமா! அதை விடுத்து வெந்த கட்டையாகிய எனக்கு சிங்காரமும் வேண்டுமோ! நான் நிர் தாக்ஷண்யமாகவும், அலக்ஷ்யமாகவும் சொல்வதாக எண்ணாதே! அந்த மோதிரத்தைக் கண்டால் என் அங்கமே அனலாகி விடு கின்றது. என்ன செய்வேன்? அப் பாழும் மோதிரத்தை நீயும் அணிந்துகொள்ளாதே! கழற்றி எறி." என்று ஜெயமணி கூறிக் கொண்டிருக்கையில் சாருகாஸன் அதைக் கழட்டி தன் சட்டைப் பையில் போட்டுவிட்டான்.

சாரு:—கண்மணி! வாஸ்தவம் உன்னறிவு எனக்கில்லை. இம் மோதிரத்தை உனக்கு நான் பூட்டிய அன்னாளில் நடந்த ஒவ்வொரு சம்பவத்தையும் எண்ணினல் பகீர் என்கிறது. உன்னை உன் தாயார் அழைத்து இப்போது தான் திட்டுவது போலும் நீ புலம்பு வது போலும் இருக்கின்றது. அந்த சமயம் நானடைந்த துன்பமும் வேதனையும் என்னை இப்போதும் தாக்குகின்றது. உம். அதொரு காலம், இதொரு காலம். ஆகா! என் கண்ணே! ஜெயமணீ! இவை எல்லாவற்றையும் விட உன்னுடைய விவாகத்தைக் குறித்து எனக்கு கடிதம் வந்த காலை என்னுள்ளம் இருந்த நிலைமையையும், நான் உடனே புறப்பட்டு வந்ததும் விவாக அலங்காரமாக உன் வீட்டு வாயலிலிருந்த பந்தலைக் கண்டதும், பிறகு உன்னைக் கண்டு நான் கதறியதும், அதன் பின் திரும்பிச் சென்றதுமான கண்ராவிகளை என்னென்பேன்? ஐயோ! அந்த (பீலிங்கு) உணர்ச்சிகள்—சங் கடங்கள்—கொடிய பரிபவங்கள்—என்னுடைய இருதயத்தில் வேரூன்றிப் போய் சதா என்னை வருத்திக்கொண்டே இருக் கின்றன. அந்த வேதனைகளினல் எனக்குப் பசியும் நசித்து நித்திரையும் சத்துருவாயிற்று. ஊக்கமும் தூக்கத்தி லாழ்ந்தது. என்னுடைய சகல செயல்களும் மாண்டுவிட்டன. பித்தமே பிடித்து விடுமென்று தோன்றிவிட்டது. ஆகா! நான் உன்னைப் பிரிந்து ரயிலில் வந்த வயிற்றெரிச்சலும், வந்த பின்னர் அடைந்த துன்பமும் என் னுடைய தேகம் சாம்பலாகிய பிறகும் அதில் ஒட்டிக்கொண்டிருக்

கும்; வேகாது நிற்கும் என்றே கூறுவேன். நான் ஊருக்குச் சென்று வெகு நாள் வரையில் என்னிடம் வரும் ரோகாளிகளுக்கு ஒன்றுக்கொன்று மருந்துகளை எழுதிவிடுவேன். அந்த மருந்து எழுதும் காகிதத்தில் என்னை யறியாது 'ஜெயமணி! கண்மணி!' என்று எழுதிவிடுவேன். பிறகு கிழித்து விட்டு வேறு எழுது வேன். இவ்விதமான தடுமாற்றத்துடன் நான் பட்ட அவஸ்தை யைக் கூறச் சாத்யமன்று. எல்லோரும் என்னுடைய மாறுபட்ட மான நிலைமையைக் கண்டு "என்ன டாக்டர்! உடம்பு என்ன? ஒரு வாறாக இருக்கிறீர்களே!" என்று கேட்பார்கள். தேக அசுகம் என்று பதில் கூறுவேன். எனக்கு மேலுள்ள வைத்தியர்கள் எனக்கு மருந்து கொடுப்பதாயும், நிம்மதியான ஓய்வு எடுத்துக்கொள்ளும் படியாகவும் கூறுவார்கள். உம், எனக்கென்ன கேடு வந்துவிட்டதா! ஒன்றுமில்லை. அவைகளை எல்லாம் தந்திரமாக தட்டிவிட்டு என் விதியைத் தொலைத்துக்கொண்டே வருகிறேன். என்னுடைய அந் தரங்கமான விஷயங்களை அக் காலங்களில் சிறிது வெளியிட்டு ஆற்றிக்கொள்ளவும் ஒருவரு மில்லை. என்னுடைய அந்தரங்க மறிந்த நண்பன் சந்திரகாஸன் ஒருவனே யாகும். நீ பெருத்தி. உனக்குக் கடித மெழுதுவது கூடுமோ, கூடாதோ! என்கிற பயத் தினாலும், உன் புருஷருடைய குணம் தெரியாதாகையினாலும் பேசா திருந்துவிட்டேன். என்னுடைய நண்பனுக்கு எப்போதேனும் சில விஷயங்களை எழுதுவேன். நானே என் துயரத்தைப் பல பக்கங்கள் தோன்றியவாறு எழுதுவதும், படிப்பதும், கண்ணீர் விடுவதும், கிழித் தெறிவதுமாக பித்தன் போலச் செய்வேன், இவ் விதமான தடுமாற்ற நிலைமை நான் உன்னை நேரில் கண்டு சென்ற பின்னரே சிறிது குறைந்ததென்று கூறலாம். உம். குறைவதாவது, நிறைவதாவது. எல்லாம் ஒரே நிறையாகவே ஆய்விட்டது. ஏதோ! இந்த சமயம் உன்னை நான் எதிர்பாராது சந்தித்து மகிழ்ந்ததே பெரு மகிழ்ச்சியாயிற்று.

ஜெய:—சாருகாஸா! நம்முடைய துயரங்களையும், தீராத சங்கடங்களையும் எடுத்துக் கூறுவதென்றால் யுகம் யுகமாக பொழுது சேர்ந்தாலும் போதாது. அவைகளைப் பற்றி இனி பேசுவதே

எனக்குப் பிடிக்கவில்லை. தொலைந்த நாள் தொலையட்டும்.........நீ இவ்வூரில் இன்னும் எத்தனை நாள் இருப்பதாக உத்தேசம்?

சாரு:—நாளையே திரும்புவதாக எண்ணி வந்தேன்; நான் கல்கட்டாவில் இறங்கி உன் வீட்டிற்குச் சென்று தான் வந்தேன். நீங்கள் ஊரிலில்லை என்பது தெரிந்ததே யன்றி இவ்விடம் வந்திருப்பீர்கள் என்று நான் நினைக்கவில்லை. வந்த விடத்தில் உன்னுடைய சந்திப்பும், அம்ருத வசனமும் கிடைத்தன. இனி எப்போது கிளம்பினாலும் கிளம்பலாம். உங்களுடைய உத்தேசம்?

ஜேய:—என் பர்த்தா இனி, இதோடு லீவில் தானிருந்து பென்ஷன் வாங்கப் போகிறார். இனிமேல் நாங்கள் திவ்ய தேசங்களுக்கு யாத்திரை செய்யக் கிளம்பலாமென உத்தேசம். புண்ணிய தீர்த்தங்களில் நீராடி சுவாமி தரிசனம் செய்துகொண்டு வந்தால் பண்ணிய பாவம் தொலையாதா!

சாரு:—கண்மணி! யாத்திரை கிளம்ப நீ பெரிய கிழவியாகி விட்டவள் போலப் பேசுகின்றாயே!

ஜேய:—ஆகா! என்ன அறியாமையாகக் கேட்கின்றனை? 18 வயதுடைய பெண்ணின் கணவன் பென்ஷன் வாங்கிவிட்ட காலையில் அந்தப் பெண் உண்மையில் கிழவி யல்லவா! கிழவருக்கு வாழ்க்கைப் பட்ட அன்றே நான் கிழவி என்பதை மறந்தனையா! என் வாழ் நாளும் கிழவியேயாய் விட்டது. ஆனால் ஆயுள் முடிவதற்கு மட்டும் கிழவியாகவில்லை; இன்றே ஜெனித்துள்ளவள் போல வளருகின்றது; நீ உன் பெற்றோரிடம் போகவில்லையா!

சாரு:—ஆகா! என் பெற்றோரிடமா! நான் செல்லவேண்டியது உலக நியாயந்தான்; ஆயின் நான் அவ்விடம் சென்றால் என்னுடைய மனோ நிலைமையில் நான் என்னை யறியாது அவர்களை என்ன சொல்லிவிடுவேனோ! எவ்வித விபரீதம் நடந்துவிடுமோ! என்கிற யோசனையால் நான் செல்லவில்லை. இனியும் போகப் போவதில்லை. நான் நேரே லாகூருக்கே செல்கிறேன். பெற்றோருக்கு தமது மக்கள் மகிழ்ச்சியாயும், சந்தோஷமாயும், குடும்ப வ்ருத்தியுட னிருந்

தால் தான் பிடித்தமாயிருக்கும். ஒண்டிக் கட்டையாக விருக்கும் என்னைப் பற்றி அவர்கள் சிந்திக்கவேண்டியதே அநாவசியம். அவர்களுடைய வயிற்றில் ஜெனித்ததற்காக அவர்களின் கர்மக்ரியை செய்துவிடவேண்டியது எனது கடமை. அக் காலத்தில் அந்த கடனை தீர்த்துவிட்டால் எனக்குள்ள பொறுப்பு நீங்கியதாகும். மற்றபடி எனக்கும் அவர்களுக்கும் ஒருவிதமான சம்மந்தமு மில்லை. அதிருக்கட்டும். கண்மணி! நானே டாக்டர்! சாதாரண மாக சகலருடைய கைகளையும் சகஜமாகத் தீண்டக் கூடியவன். களங்கமற்ற மனத்தை யுடையவன். உன் கரத்தை நான் தீண்ட லாகுமா! கரத்தையேனும் பற்றி கண்ணில் ஒற்றிக்கொள்ள அருள் புரிவாயா!

ஜேய:—(கண்ணில் நீர் ததும்பியவாறு) ஐயோ! சாருகாஸா! இப் பாழுங் கரத்தை நீ ப்பற்றிவிட்டதால் உனக்கென்ன வந்து விட்டது. என்னுடைய எண் சாண் அங்கமும் உனக்கே உரிமையாக விருந்தது தப்பிவிட்ட பின்னர் இனி கரத்தைப் பற்றுவதாலும் சிரத்தைப் பற்றுவதாலும் என்ன பயன் இருக்கின்றது. ஒன்றன்பின் ஒன்றாக மனம் தாவுவது மனத்தினியல்பு; அவ்வாறு தாவ விட்டு த்ருப்திபடையும் வகை யின்றி தவித்து உருகி வருந்துவதைவிட ஒருவிதமான எல்லைக்குள் நிற்பதே நலம். இப் பாழும் கரத்தை வெட்டி தீயிட்டுப் பொசுக்கிக் கண் குளிரப் பார்க்கலாம். அவ்விதம் செய்தால் என் மனம் நிம்மதி யடையும். சாருகாஸா!—நீ என் கரத் தைப் பற்றிவிட்டதனாலேயே நாம் கெட்டுவிட்டதாயும்—கெட்டுவிடு வதாயும்—ஆய்விடமாட்டாது. உலக நிந்தைக்கு சிறிது கட்டுப்பட வேண்டியது ஒன்றுதான் முக்கியம்.

சாரு:—கண்மணி! நான் என்னுடைய எல்லையைக் கடந்து விடுவேன் என்று நீ கனவிலும் நினைக்காதே! நான் என்னுடைய காயத்தை எவ்விதம் காஷ்டமாக உலர்த்தி வருகிறேன் என்பதை எனது சட்டைகளைக் கழற்றினால் என்னைக் கண்டு நீயே பயந்து அடிப்பாய். என்னுடைய மனத்தை நான் திடமுறச் செய்து கொண்டிருப்பது போல மற்றவர்கள் ஒருபோதும் செய்ய மாட்டார்கள் என்பதை நான் திட்டமாகக் கூறுவேன். என் காயம்

உலர உலர மனமும் உலர்ந்துகொண்டே வருகின்றது. இன்னும் சிறிது காலத்திற்குள் என்னையே சிறந்த யோகேச்வரன் என்று பிறர் கூறும்படியான நிலைமையில் காவி வஸ்திரமும், தீக்ஷையும் தரித்துக் கொள்ள நான் தீர்மானித்துவிட்டேன். என்னுடைய ஆத்மா கெட்டழியாத தன்மையைக் கடவுளறிவார். அவருடைய ஆணைப் படிக்கு நான் பரிசுத்தவானே யாவேன். என்னுடைய வேஷங்கள் எவ்விதம் மாறியபோதிலும் என்னுவி பிரியும் பரியந்தம் உன்னை ஒரு கணமும் மறக்கமாட்டேன். உன்னினைவு என்னுடல் அழிந்த பின்னும் ஆன்மாவோடு ஐக்யமாகியே செல்லும். உலக இன்பத்தை இவ்விளம்பிராயத்திலேயே வெறுத்து விட்டேன். உன்னை மறக்க சக்தி யற்றேன். அன்னினைவுடனேயே என்னுவி பிரியும். உன் மனது இசையாத வேலையில் நான் இறங்கமாட்டேன். உன் கரத்தைத் தீண்டாவிடினும் உன்னுருவைப் பார்க்கும்படியாக எனது கண்களையேனும் ஈசன் அவித்துவிடாது அளித்திருந்தால் போதும். அதற்கும் என்னுடைய அதிர்ஷ்டம் எப்படி இருக்கிறதோ! கண் மணீ! நான் உன்னுடைய வீட்டிலிருந்து சென்றபோது ஒரு தப்பிதம் என்னை யறியாது அன்பின் பெருக்கினுல் செய்துவிட்டேன். அதாவது, நீ சயனித்திருந்த ஜன்னலருகில் வந்து உன் பாதத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டு உனது கைக்குட்டையை நீ யறியாது திருடிக்கொண்டு சென்றுவிட்டேன்; இந்த தப்பிதத்திற்கு மன்னிக்கவேண்டும்.

ஜேய:—ஆகா! இந்த அற்ப காரியங்கள் தப்பிதமானதா! என்ன வார்த்தை சொன்னுயப்பா! உன்னுடைய மொழிகளைக் கேட்க என்னை யறியாது வருத்த மேலீட்டால் மயக்கம் வரும் போல விருக்கிறது. என்ன செய்வேன்? ஐயோ! நீ காவி உடை அணிவதா! தீக்ஷை வளர்ப்பதா! ஹா! இதென்ன பரிபவமடா! என் அன்பான சாருகாலா! நான் இந்த கோரமான வார்த்தைக்கு எவ்விதம் பதிலளிப்பேனடா! உன் மேனி துரும்புபோல மெலிந்து விட்டதை நான் காணவில்லை என்று நினைக்காதே! உன்னுடைய கைப்பாகத்தைப் பார்க்கும்போதே மெய்ப் பாகம் தானே விளங்கவில்லையா! உம். எல்லாவற்றிற்கும் பாவி நானல்லவா காரணமாய்

விட்டேன். இந்த வயிற்றெரிச்சலை எண்ணினல் என்னுடைய அங்கமே பற்றி எரிகின்றது. ஐயோ! வேண்டாம்; நீ அம்மாதிரி யான கோலம் செய்துகொள்ளாதே! அதைக் கண்டு நான் சகிக்க மாட்டேன். என் மனம் அதைக் கேட்கும்போதே தவிக்கின்றது.

சாரு:—கண்மணீ! இப்போதடையும் துன்பத்தைக் காட்டிலும் இனிமேல் நமக்கு துன்பமும் இருக்கின்றதா! என்னை எந்த கோலத் தில் கண்டால்தான் என்ன, வீணுன இக்கட்டையை மூடிவைப்ப தற்கு விலை அதிகமாக செலவாகக்கூடிய சட்டைகளும், துணிகளும், பட்டுக்களும் வாங்கி வ்ரயம் செய்தால் பயன் யாது? அந்த பணத்தையும் பல ஏழைகளுக்குக் கொடுத்தால் நற்கதியேனும் கிடைக்காதா! பாழும் கட்டையை எந்த உடையால் மறைத்தால் தான் என்ன? அவ்வாறணிவதால் என்னுடைய மருத்துவம் குறைந்து விடுமா! ஒரு போதுமில்லை; இதற்காக நீ வருந்தாதே! கண் மணீ! கண்கலங்குகின்றுயே! வேண்டாம். புலம்பாதே!

ஜேய:—சாருகாஸா! புலம்புவதும் நகைப்பதும் கடவுள்செயல். எந்த வேளையில் எவ்விதம் வைக்கின்றுரோ அவ்விதம் தான் யாவும் நிகழும். இந்த வேளை என்னைக் கண்ணீர் சிந்தும் படியாகச் செய் திருக்கிறுர்; அவ்வாறு வருகிறது. என்னுடைய விதி என்னுடன் நில்லாது உன்னையும் தாக்கி வதைக்கின்றதே! இந்த கன்மத்திற்கு என்ன செய்வேன்? நான் எதை எண்ணி வருந்துவேன்? எனக்கே புலப்படவில்லை. உம். எல்லாம் அவன் கருணை. நாங்கள் இவ்வூரிலிருக்கும் பரியந்தம் நீயும் இங்கிருக்கிறுயா!

சாரு:—உம். நான் இங்கிருந்தாலென்ன, எங்கிருந்தா லென்ன? உன்னைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலால் பார்த்தாயிற்று. நானும் எனது நண்பனுடைய வீட்டிலிருக்கிறேன். நீயும் உனது சிநேகிதையின் வீட்டிலிருக்கிறுய், இருவரும் ஒன்றுக இருப் பதற்கு முடியாது. அப்போதைக் கப்போது சந்திக்கலாம். அத ஞல் உனக்கு அபகீர்த்தியே விளையும். ஆகையால் நான் இருந்து உப யோகம் யாது? மேலும் எனக்கு லீவும் இந்த வாரத்துடன் பூர்த்தி யாகி விடுகின்றது. ஆகையால் நான் போய்ச் சேரவேண்டும்.

இம்மட்டும் கிடைத்ததே மகா பாக்யமாகும். அதோ உன் கணவர் வரும் சமயம் போலவிருக்கிறது. அவர் வந்த உடன் அவருடன் சொல்லி விட்டு நான் போய் வரட்டுமா! என் கண்ணே! இம் மட்டும் நமது வினை நம்மைப் பிரித்து விட்டது. இனி எப்போது சந்திப்பேனே! அன்னுள் எப்போது கிட்டுமோ!" என்று கூறிக் கொண்டே தன்னை மறந்து திகைப்பூண்டை மிதித்தவன் போல மயங்கி ஜெயமணியின் இருகரங்களையும் பற்றித் தன் கண்களில் ஒற்றிக்கொண்டான். அவ்வாறு ஒற்றிக்கொண்ட க்ஷணநேரம் தன்னை மறந்த ஆநந்த சாகரத்திலாழ்ந்து அகமகிழ்ந்தான். சொர்க்க போகமும் இப்போதடையும் ஆநந்தத்திற்கு அளவில்லை என்று எண்ணினன். "ஆகா! இவ்வானந்தத்தை எனக்கு என்று மளிக்காது பாழாக்கி விட்டாயே! ஈசா!" என்று கண் கலங்கினன். அடுத்த கணத்தில் முன்னர் ஜெயமணி தெரிவித்த வார்த்தைகள் நினைவிற்கு வந்ததும் திடுக்கிட்டுத் தீயை மிதித்தவன் போல நடுங்கியவாறு அவளுடைய கரங்களை விட்டு விட்டு மிகவும் பரிதாபகரமான தொனியுடனும், பார்வையுடனும் ஜெயமணியை நோக்கிப் பேசத் தொடங்கி, "என் கண்மணி! ஜெயமணி! நான் உன் மன விரோதமான காரியத்தை—தவறுதலே—மதியீனத்தினுல் செய்துவிட்டேன். என்னுடைய இப்பிழைக்கு மன்னிக்க வேண்டுகிறேன். என் கண்ணே! கோபிக்கின்ருயோ! என் மீது வெறுப்பு கொண்டனையா!

ஜெய :—சாருகாலா! நானொரு சவம்; நீயொரு சவம். இருசவங்களையும் இனி எறிய வேண்டுவதுதான் பாக்கியாகையால் இனிமேல் அந்த வார்த்தைகளை விட்டுவிடு. அதோ என் பர்த்தா வருகிருர்.—என்று கூறுகையில், கங்காதரர் புன்முறுவல் பூத்த வதனத்துடன் அவ்விடத்திற்கு வந்தார். சாருகாலனை நோக்கி "நண்பரே! நான் எனது நண்பரிடம் சென்று பேசி சில செய்திகள் தெரிந்து கொண்டு வந்தேன். அதனுல் மிக்க விசனமே அடைகின்றேன். அவர் யார், தங்களுக்குத் தெரியுமா! அவரை எங்கேனும் பார்த்ததுண்டா?" என்ருர்.

சாரு :—அன்பீர்! நான் அவரைப் பார்த்ததில்லை. அவர் யார்? அவருக்கு என்னைத் தெரிந்திருக்கலாம். எனக்கு அவர்

இன்னுரென்று தெரியவில்லையே! ஒருக்கால் நானும் பார்த்திருக் கலாம்; இப்போது தெரியவில்லை.

கங்கா:—சாருகாஸரே! அவர் உங்களை யார் என்று கேட்ட தற்கு தங்களைப்பற்றிக் கூறி என்னுடைய உறவினர் என்றேன். அவர் தங்களுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்தில் "ஆகா! டாக்டர். சாருகாஸரா! என்னுடைய புதல்வி பத்மலோசனுவைத் தமக்குத் தெரியுமல்லவா! அவள் லாகூர் ஆஸ்பத்ரியில் லேடி டாக்டராக இருக்கிருள். அந்த ஆஸ்பத்ரியிலேயே இவரும் டாக்ட ராக விருக்கிறுர். இவரை என் மகள் காதலித்த செய்தியை என் னிடம் தெரிவித்தாள். 'உங்களிருவரின் மனம் சம்மதித்த உடனே எனக்கு தெரிவித்தால் விவாகத்தை முடித்துவிடலாம்' என்று நான் எழுதிவிட்டேன். இவரை என் மகள் நேரில் கண்டு விசாரித்த போது இவர் சம்மத மில்லை என்று மறுத்துவிட்டாராம். என் மகள் அதே ஏக்கத்தினல் கடுமையான நோய் வாய்ப்பட்டு படுத்து விட்டாள். இன்னும் குணமில்லை. எனக்கு லீவு கிடைக்காமை யால் நானும் போகவில்லை. எங்களுடைய அதிர்ஷ்டம் அவ்வளவு தான்" என்று வருத்த முற்றுர். நண்பரே! தாங்கள் ஏன் மறுத்து விட்டீர்கள்?

சாரு:—அன்பீர்! உங்களை நான் மிகவும் மன்றுடி கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய விவாக விஷயமாக இனிமேல் பேச வேண்டாம். அந்த வார்த்தையை அம் மட்டும் விட்டு விடுவதே நலம். அதைக் கிளறவேண்டாம். சரி. நான் சென்று வரட்டுமா! சந்திரகாஸன் காத்துக்கொண்டிருப்பான். இனி விடை பெற்றுக் கொள்கிறேன். ஜெயமணி! நான் வரட்டுமா!

ஜெய:—சாருகாஸா! சென்று வருகிருயா! இனி எப்போது பார்க்க ப்ராப்தமோ! உம். அவ்வப்போது கடிதமேனும் தவருது எழுது. நாங்கள் வெளியூர்களுக்கு யாத்திரை செய்வதற்குப் போவதையும் தெரிவிக்கின்றேன். அந்த பத்மலோசனுவின் உடம்பைப் பற்றி எனக்கு எழுது. சரி; சென்றுவா—என்று இழுத்தார்ப்போலக் கூறி கண்ணீர் உதிர்த்தாள். அவள் மனம் கலங்கி

விட்டது. சாருகாஸனும் கங்காதரனிடம் விடை பெற்றுக் கொண்டு போய் விட்டான்.

பிறகு கங்காதரனும் ஜெயமணியும் சின்னம்மாளின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். தன் தோழி சின்னம்மாளிடம் தன்னுடைய காதலன் வந்திருந்ததையும், பேசியதையும் தெரிவித்தாள். இருவரும் இன்பமும், துன்பமும் அடைந்து வெகு நேரம் பேசிக் கொண்டே இருந்தார்கள். ஜெயமணிக்கு அடையாறு மிகவும் பிடித்துவிட்டமையால் அவ்விடத்திலேயே தனக்குச் சொந்தமாக ஓர் சிறிய பங்களாவை வாங்கிக்கொண்டு தான் அதில் குடியேறினாள். மோட்டார்காரையும் கல்கத்தாவிலிருந்து வருவித்துக்கொண்டார்கள். கல்கத்தாவிலுள்ள பங்களாவை வாடகைக்கு விட்டு விட்டார்கள். கங்காதரர் பின்னும் சில மாதங்களுக்கு லீவு வாங்கிக்கொண்டார். ஜெயமணி அடையாற்றில் வந்தவுடன் அவள் தாயார், தம்பிகள் முதலியவர்களும் ஜெயமணியினிடமே வந்து சேர்ந்துவிட்டார்கள். எல்லோருடைய போஷணையும் அவளையே சார்ந்தது. கங்காதரர் பிஞ்சனும் வாங்கிவிட்டார். பிஞ்சனில் பாதி குறைத்து (கம்யுடேஷன்) பெருந் தொகையும் ரொக்கமாக வாங்கிவிட்டார். இவ்விதமே ஒரு வருடத்திற்கு மேலாய்விட்டது. பிறகு ஜெயமணியும் கங்காதரனும் ஒரு பணியாளுடன் திவ்ய தேச யாத்திரை செய்யக் கிளம்பிவிட்டார்கள். இந்தியா பூராவும் உள்ள க்ஷேத்திரங்களுக்கெல்லாம் சென்று தமதிஷ்டம்போல ஒவ்வொரு ஊரிலும் பல நாள்கள் தங்கிய வண்ணமாகச் சென்றார்கள். அதே சமயத்தில் லாகூருக்கும் சென்றார்கள். அப்போது சாருகாஸன் தனது சகோதரியின் விவாகத்திற்கு ஊருக்குச் சென்றிருந்தமையால் வருத்தத்துடன் அங்கு தங்காது கிளம்பி விட்டார்கள். எல்லா ஊர்களையும் சுற்றிக்கொண்டு சுமார் இரண்டு வருடங்கள் கழித்து அடையாற்றை அடைந்தார்கள். ஜெயமணியின் சுற்றுப் பிரயாணத்தினால் அவளுக்கு முன் போல இருமல் நோய் பிடிக்க வாரம்பித்தது.

நாம் முன்னர் தெரிவித்த டாக்டர் சோமநாதன் என்பவர் அடையாற்றிலேயே தமது சொந்த பங்களாவில் ஜாகை

யையும், வைத்திய சாலையையும் வைத்துக்கொண்டு ப்ரபலமாக வைத்தியம் செய்து வருகிறார். நமது ஜெயமணியின் பங்களாவிற்கு அருகிலேயே அவருடைய பங்களா வாகையால் நமது ஜெயமணியின் தற்காலத்து பிணிக்கு அந்த டாக்டரே அவுஷதம் கொடுக்கலானார். ஜெயமணிக்கு ஜுரம் கண்டு அவள் படுத்துவிட்டாள். ஏற்கெனவே சோமநாதன் ஜெயமணி வீட்டாருக்குப் பழக்கமானவராகையால் அவர் ஜெயமணியிடத்தில் என்றும் ஒருவிதமான அன்பு கொண்டவராகவே விளங்கினார். ஜெயமணியை விவாகம் செய்துகொள்ளவே அவர் மிகவும் ப்ரியப்பட்டார். அது நடக்காது தவறிவிட்டது. அன்று முதலே ஜெயமணியின் மீது அவருக்கு ஒருவிதமான எண்ணமே இருந்தது. இந்த எண்ணத்தை ஜெயமணி அறியமாட்டாள். இந்த டாக்டரல்லாது ஜெயமணியின் மீது கண்வலை வீசியுள்ள கனவான்கள் அனந்தம் பேர்களுண்டு. அவள் படுக்கையில் விழுந்தவுடன் டாக்டர் சோமநாதனே வந்து மருந்து கொடுத்து வந்தார். வெகு கனிகரத்துடன் கவனித்துப் பார்த்துவந்தார். அவருடைய மனத்தில் ஜெயமணியின்மீது கொண்டுள்ள எண்ணம் நாளுக்கு நாள் பலப்பட்டது. அது விருத்தியாகிக் கொண்டே வந்தது. சாதாரணமாக ஜெயமணியைத் தான் எவ்விதமாவது அடையவேண்டுமென்ற எண்ணமும் அவர் மனத்தில் உதித்தது. ஜெயமணியின் விஷயத்தில் தான் பணமே வாங்காமலும் மருந்து கொடுக்க ஆரம்பித்தார். அவள் இவருடைய நிலைமையை அறியாமல் 'பில் அனுப்புங்கள்; பணம் கொடுக்கவேண்டும்' என்று கேட்டால், அதற்கு டாக்டர் 'ஓ! உங்களுக்கு பில் அனுப்புவதாவது. நான் உங்களுடைய உறவினனல்லவா! அதெல்லாம் வேண்டாம்; அப்படி பணம் கொடுக்க வேண்டுமென்று தோன்றினால் ஏதேனும் பொருளாகக்கொடுத்தால் போகிறது" என்று வார்த்தையைக் கபடமாகக் கூறி மறைத்துச் சொல்வார். இவருடைய எண்ணத்தை யறியாத ஜெயமணி பொருளாகவே சில கொடுத்தாள். அவளிடமிருந்து கிடைக்கும் பொருளை தான் சதா உபயோகமாக வைத்துக்கொண்டு அவள் நினைவாகவே இருப்பார். இவ்விதமே சில வருடங்கள் கழிந்தன. ஜெயமணிக்கு உடம்பும் பூர்ணமாக குணமாய்விட்டது.

பின்னும் சில மாதங்கள் கழிந்தன. கங்காதாருக்கு தேக அசுகம் உண்டாய்விட்டது. அதனால் ஜெயமணி டாக்டரை வரவழைத்தாள். டாக்டரும் வந்து கங்காதரரைப் பார்த்துவிட்டு வெளியே வந்ததும், ஜெயமணி டாக்டர் பின்னோடு வந்து, "டாக்டர்! என் புருஷருக்குப் பயம் ஒன்றுமில்லையே! குணமாகிவிடுமா!" என்று கேட்டாள். அதற்கு அந்த டாக்டர் ஒருவிதமாக நகைத்துக்கொண்டே "ஜெயமணீ!" என்று அழைத்தவாறு அவளது இரு கரங்களையும் பற்றிக்கொண்டார். இந்த எதிர்பாராத விபரீத செயலைக் கண்டு ஜெயமணி நடுநடுங்கி நின்றுவிட்டாள்.

## 15-வது அதிகாரம்.

### கலவரச் சம்பவம்—கலக்கமும் சீற்றமும்

ஜெயமணியுடன் பேசிவிட்டுச் சென்ற சாருகாஸன் அன்றைய மறு தினமே கிளம்பி லாகூருக்குச் சென்றுவிட்டான். லாகூரில் பத்மலோசனா எப்படி இருக்கிறாள் என்பதை விசாரித்ததில் சிறிது குணம் என்பதாகத் தெரிந்தது. பின்னும் சில தினங்கள் சென்றதும் பத்மலோசனா தன் தொழிலை மேற்கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தாள். அங்கு சாருகாஸனைக் காணுந்தோறும் உள்ளமுருகி வேதனையடைவாள். சாருகாஸனும் பத்மலோசனாவின் மீது இரக்கங்கொண்டு பரிதாபமடைவான். இருவரும் தொழில் சம்பந்தமாக சமயம் வாய்க்கும் போது பேசுவது தவிர, மற்ற சமயம் இருவரும் முகமும் பார்க்காமல் இருந்தார்கள். பத்மாவும் மனம் வெறுத்து விவாகமே செய்துகொள்ளவில்லை. விவாக விஷயத்தைப் பற்றி சாருகாஸன் அவளிடம் ப்ரஸ்தாபிப்பதே கிடையாது. இவ்விதமே சில வருடங்கள் ஆய்விட்டன. சாருகாஸன் அவ்விடம் விட்டு

வரவு மில்லை. ஜெயமணியைக் காணவு மில்லை. மனத்தில் ஏக்கம், கொண்டவாறு தன் காலத்தைக் கடத்தலானுன்.

சாருகாஸனின் தங்கையை நாம் முன்னர் தெரிவித்தபடி சீமையிலிருந்து ராதாபாயின் வீட்டிற்கு வந்த வாலிபனுக்குக் கொடுத்து விவாகமாய் விட்டது. சாருகாஸனுடைய பெற்றேர்கள் தாங்கள் எந்த விதத்தில் சூழ்ச்சி செய்தேனும் தமது மகனுக்கு விவாகத்தைச் செய்துவிடும் பொருட்டு பல விதத்தில் முயன்று பார்த்தார்கள். சாருகாஸன் ஒரு விதத்திலும் இணங்க வில்லை; ஆகையால் அவர்கள் ஒருவிதமான தீர்மானத்தைச் செய்து விட்டார்கள். அதாவது நிரம்பவும் எழில் மிகுந்த ஓர் மாதரசியை சாருகாஸனின் அனுமதியில்லாமலேயே நிச்சயம் செய்து விட்டு அவனை எவ்வகையிலாவது வரவழைத்து விவாகத்தை முடித்து விடவேண்டும் என்பதேயாம். இவ்விதமான தீர்மானத்தை நிறை வேற்றுவதற்கு ஒரு தக்க விடத்தில் மிகவும் வனப்பு வாய்ந்த வனிதாரத்தினத்தைக் கண்டு அவளுடைய பெற்றேர்களுடன் கலந்து நிச்சயம் செய்து விட்டார்கள். அவ்வாறு நிச்சயம் செய்த பிறகு சாருகாஸனுக்கு "உன்னுடைய தாயார் அதி ஆபத்தான நிலைமையிலிருக்கிறுள். உடனே வரவேண்டும்" என்று ஓர் தந்தி யடித்துவிட்டார்கள். அதன் பிறகு சாருகாஸனின் தாயார் தன் மகளை நோக்கி "அம்மா! அந்த ஜெயமணியின் மீது கொண்ட ஆசையால் அவன் விவாகத்திற்கு மறுக்கிறுன். ஆகையால் அந்த ஜெயமணியையே நாம் வசம் செய்து கொண்டு அவளே இஷ்டப்பட்டு முனைந்து இக்கலியாணத்தை நடத்தி வைக்கவேண் டிய மார்க்கத்தை நாம் செய்து விட்டால் சாருகாஸன் ஜெயமணியின் இஷ்டப்படிக்கு அவள் வார்த்தைக்குக் கட்டுப் பட்டு விவாகத்தைச் செய்து கொள்வான். இதுதான் தக்க சூழ்ச்சி. இதற்கு என்ன செய்ய வேண்டுமென்றுல் நீயும் உன் புருஷனும் ஜெயமணியின் வீட்டிற்குச் சென்று அவளுடன் சமரசமாகப் பேசி அவள் மனத்தை மாற்றி அவள் கைப்பட சாருகாஸனுக்கு ஒரு கடிதம் வாங்கிக் கொண்டு வந்துவிடு. அந்தக் கடிதத்தைக் காட்டி சாரு காஸனை மணக்கும்படியாகச் செய்து விடலாம். ஆகையால் இன்றே

புறப்படுங்கள் என்று திட்டம் செய்தாள். அந்த யோசனையை ஆமோதித்து அவளுடைய மகள் அன்றே புறப்பட்டு விட்டாள்.

* * * * *

நாம் முன்னதிகாரத்தில் தெரிவித்தது போல நமது நற்குண வதியாகிய ஜெயமணியின் கரங்களை சோமநாதன் பற்றிய மூட்டுத் தனமானதும், கொடிய பயங்கரமானதுமான செய்கையைக் கண்ட அவள் நடுநடுங்கிப்போய், அபாரமான ஆத்திரம் மூண்டவளாய்ப் பேசத்தொடங்கி, "டாக்டரே! இதென்ன அநியாயமான செய்கை! இவ்விதம் உம் போன்ற பெரிய மனிதர்கள் செய்வது தகுமா! விடும். என் கையை விடும். உம்மை இது பரியந்தம் நான் யோக்கிய மானவர் என்று எண்ணி உம்மை நான் வைத்தியத்திற்கு அழைத் தேன். உம்முடைய துர்க்குணத்தை நான் தெரிந்து கொள்ளாது மூடமாகி விட்டேன். என்னிடம் நீர் பணம் வாங்காது முன்னர் தடுத்து என்னுடைய பொருளை வாங்கிக் கொண்டபோதே நான் அறிவாளியாயின் உமது கபடத்தைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். ஏதோ உம்முடைய நயமான வார்த்தையால் உம்மை யோக்யர் என்று நினைத்து விட்டேன். இவ்விதம் செய்வது உமக்கு அடுக்காது. விடும் என் கரத்தை" என்று கூறிக்கொண்டே தன்னுடைய முழு பலத்தையும் உபயோகித்துத் திமிறிக் கொண்டு தன் கையை விடுவித்துக்கொள்ள முயன்றாள்.

காமாதுரமான எண்ணங்கொண்டு மதயானையின் பலத் துடன் பிடித்துள்ள பிடியினின்று விடுபடக்கூடாமல் தவிக்கும் ஜெயமணியைக் கண்ட சோமநாதன் நகைத்துக் கொண்டே, "ஜெயமணி! பயப்படாதே! நீ கூறுவது போல நான் அயோக்ய னன்று; துஷ்டனன்று. என் மனத்தில் உன்மீது கொண் டுள்ள காதலை ஒரு அளவிட்டுக் கூறச்சாத்தியமன்று. அந்த காதல் தீயினால் நான் பல வருடங்களாக தகிக்கப் பட்டு வருந்துகிறேன். அந்த உண்மையை இன்று உன்னிடம் வெளியிடும் பொருட்டே உன் கரத்தைப் பற்றினேன். என்னிடம் நீ ஏன் பயப்படவேண் டும். இதோ உன் கையை விட்டு விடுகிறேன்; அவ்வாறு விட்ட வுடனே நீ இவ்விடத்தை விட்டு ஓடிவிடுவாய். நான் முக்கியமாக சில

வார்த்தைகள் உன்னுடன் கூறும் பொருட்டு எதிர்பார்க்கிறேன். நீ இவ்விடத்திலேயே நின்று அதைக் கேட்கவேண்டும். அவ்வாறு கேட்பதாக வாக்களித்தால் இதோ இப்போதே விட்டுவிடுகிறேன்.

ஜேய :—ஓகோ! இந்த கண்டிஷனெல்லாம் பேசவேண்டாம். நான் இப்போது ஒரு கூச்சலிட்டால் எங்கள் பணியாள்களெல்லோரும் வந்து விடுவார்கள். உமது மான மழிந்து விடும். மரியாதையாகக் கையை விட்டு விடும்.

இ 1002

சோம :—கண்மணீ! ஆத்திரமுறாதே! நான் உன்னை ஒன்றும் செய்துவிட மாட்டேன்; இதோ விட்டு விட்டேன். சிறிது நின்று என் வார்த்தையைக் கேட்க வேண்டும். நான் உன்மீது கொண்டுள்ள ஓர் கடுமையான காதலைப் பற்றிக் கூறச் சாத்யமன்று. நான் உன்னையே எண்ணி'உள்ளம் உருகுகின்றேன். இரவு பகலாக நான் படும் வேதனையை இயம்பற்பாலது. எந்த நேரமும் என்னுடைய நினைவிலும், கனவிலும் உன்னுருவமே தாண்டவமாடுகின்றது. நான் உன்னுடைய காதலையே மேன்மையாக மதிக்கின்றேனே யன்றி மற்றதை மதிக்கவில்லை. நான் எந்தப் பண்டத்தைத் தின்றபோதிலும் உனக்கென ஒரு சிறிது—துண்டு—எடுத்து வைத்த பிறகே நான் புசிக்கின்றேன். உன்னுடைய நினைவிற்கு முன்னால் எனக்கு எதுவும் பொருட்படவில்லை. இந்த பாழாய்ப்போன டாக்டர் வேலையும் எனக்கு வேண்டாம். உன் பொருட்டாக நான் விட்டு விடுகிறேன். உன்னுடைய வயதோ இன்னும் 21 நிரம்பவில்லை. உன் புருஷனோ கிழவன். அதிலும் சிக்கில் விழுந்து விட்டான். அவனுடைய காலம் எப்படி முடியுமோ தெரியவில்லை. நீ உன்னுடைய வாழ்நாளைப் பாழ் படுத்தாது என்னுடன் வந்து விடு. நாம் இவ்வூரிலேயே இல்லாது கண் காணாத தேசத்திற்குச் சென்று இன்பமாக இல்லறம் நடத்துவோம். என் கண்ணே! நான் கெஞ்சுவது உனக்குத் தெரியவில்லையா! உன் மனம் இளகவில்லையா! உன்னுடைய மனத்தில் என்பால் இரக்கமில்லையா! என்னுடைய ஆவி முற்றும் உன்பால் ஐக்கியமாகி விட்டதே! என்னை இனிமேல் வருத்தாது என்னிஷ்டப்படி வரமாட்டாயா! ஜெயமணீ! ஜெயமணீ! என்ன

சொல்கிருய்?" என்று மிகவும் கெஞ்சலாயும், கொஞ்சலாயும் கேட்டான்.

நமது மின்னிடை மாதரசியாகிய ஜெயமணி தன் கரத்தை சோமநாதன் விட்ட நிமிடமே வீராவேசத்துடன் ஓட முயன்ருள். அப்போது சோமநாதன் வழிமறித்துக் கொண்டு மேற்கூறியபடி வார்த்தைகளைக் கூறினன். ஜெயமணி வெளியில் போகமாட்டாமல் தவிக்கின்ருள் கூச்சலிட்டுவிட்டால் தனக்கும் அவமானமாய்விடுமே என்கிற ஓர் பயத்தினல் தத்தளித்தவாறு நிற்கையில் சோமநாத னின் வார்த்தைகள் காதில் நாராசம் காய்ச்சி விடுவதுபோல விருந்த தால் ஜெயமணி அளப்பரிய ஆத்திரத்தை அடைந்து கண்கள் சிவக்கப் பேசத் தொடங்கி, "டாக்டர்! உம்முடைய கேவலமான புத்தியைக் காண எனக்கே வெட்கமாக இருக்கிறது. என்னை நீர் கேவலம் தாசி, வேசி என்று எண்ணிவிட்டீர் போலும். சேச்சே! சகல ஸ்திரீகளுக்கும் சோதரன் போன்றுள்ள முறையில் பழக வேண்டிய உமது வைத்திய முறையில் நீர் மிகவும் நீசத்வமான—த்ரோகமான—எண்ணம் எண்ணுவது சிறிதும் நன்ருக இல்லை. என் கணவன் கிழவராயினும் சரி; மற்று எவ்விதமிருப்பினும் சரி. நான் இந்த அற்ப வார்த்தைக்கு மயங்கி உம்முடன் வந்துவிடுவே னென்று எண்ணவேண்டாம், என்னுடைய காலில் ஒட்டிய தூசி யும் அவ்விதமான வேலையை—நினைவை— மனத்தினும் நினைக் காதென்பதை உறுதியாக நம்பும். இனிமேல் நீர் வயித்தியத்திற் கும் இவ்விடத்திற்கு வரவேண்டாம்; வெளியே செல்லும்" என்று வெகு கோபத்துடன் கூறி விரைக்க நின்ருள்.

சோமநாதன் "இப்போதே இன்னும் அதிகமாகப் பேசினல் காரியம் கெட்டு விடும். எதையும் விட்டுத்தான் பற்ற வேண்டும்" என்று எண்ணியவனய், மெல்லப் பேசத்தொடங்கி, "ஜெயமணீ! அவசரப்படாதே! இவ்வமயம் நான் செல்கிறேன். நீ நன்ருக யோசனை செய்து எனக்குப் பதில் கூறு" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

ஜெயமணிக்கோ அன்று நடந்த புதிய சம்பவத்தினல்

மனத்தில் சகிக்கக்கூடாத வேதனை உண்டாய் விட்டது. தன் புருஷ னின் வ்யாதி குணமாகவேண்டுமே என்கிற ஓர் கவலையும் சேர்ந்து வதைக்கின்றது. அன்று நிகழ்ந்த சம்பவத்தை தன் கணவனிடம் சொல்லலாமா! என்று எண்ணினுள். பின்னும், இத்தகைய நோய் வாய்ப்பட்டுள்ள சமயம் சொல்வது பிசகு என்று தோன்றியதால் பேசாதிருந்து விட்டாள். அவளுடைய மனக் குழப்பத்தினுல் ஒன் றுமே தோன்ருது மனந்தவித்தவாறு உட்கார்ந்திருந்தாள். அவ்வாறு உட்கார்ந்திருந்த சமயத்தில்தான் நாம் முன்னர் தெரிவித்தபடி சாரு காலனின் சகோதரி அவ்விடம் வந்தாள்.

அவளைக் கண்டதுமே ஜெயமணியின் வயிற்றில் நெருப்பு வைத் ததுபோலாயிற்று.அவள் திடுக்கிட்டாள். "இதென்ன விசித்திரம். நமது ஜென்மப் பகையாளர்களின் மகளாகிய இவள் திடீரென்று எதற்கு வந்தாள்? என்ன காரணம் பற்றி;வந்தாள்?" என்றதை அறியக்கூடாமல் திகைத்துப் போய்விட்டாள். வந்தவளை வா என்று அழைக்கவும் அவள் மனம் சம்மதிக்கவில்லை. அவ்வமயம் பழங்காலத்துக் கதைகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்ருக சினிமாப் படக்காக்ஷிகள் போல கண்ணெதிரில் தோன்றி நினைவில் உறுத்தின. அவ்விதம் உண்டாகிய நூதனத் தோற்றங்களினுல் சொல்ல வறியாத பாதை உண்டாய் விட்டது. இந்நிலைமையில் ஜெயமணி இருக்கையில், சாருகாலனின் தங்கையாகிய பாகீரதி என்ற மாது ஜெயமணியை நோக்கி, "ஜெயமணி! என்னைக் கண்டதும் ஏதோ மாறுதலடைந்து விட்டதாக உன் முகம் காட்டுகின்றது. உம். இவை எல்லாம் ஒரு கால வித்யாசம். இனி அவைகளை எண்ணிப் பயனில்லை. இறந்த கால வர்த்தமானங்களை இறந்துவிட்டதாகவே பாவிக்கவேண்டும். நமது பகைமையை இனி எண்ணக்கூடாது. ஏதோ போதாக் காலக்கொடுமையால் நமக்குள் பகை என்னும் தீ மூண்டு நம்மை வாட்டிவிட்டது. தொலைந்தது தொலையட்டும். இனி மேல் நாம் சிநேகிதராகவே இருக்கவேண்டும். உன் புருஷருக்கு உடம்பு சரியில்லை என்று கேள்விப்பட்டேன். மனதிற்கு வருத்த மாக விருந்தது. உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந் தேன். உம். நீயே எனக்கு அண்ணியாக வந்திருந்தால் எத்தகைய

சிறப்பாக விருக்கும்! எல்லாம் மனப்பாலாகிவிட்டது. சாருகால னும் பித்தன்போலாய்விட்டான். கடவுள் எங்கள் வம்சத்தையே பாழாக்குவதற்குத்தான் இத்தகைய மனஸ்தாபத்தை வளர்த்தி விட்டார். என் பெற்றோருக்கு ஒரு மகளுக இருந்தும் மகிழ்ச்சி யில்லாது மடிய நேர்ந்து விட்டது. இரவு பகலாக என் பெற் ரோர்கள் படும் துன்பத்தைக் கூற வியலாது. அவர்களுடைய தலை விதி இது. உம். இந்த ராமாயணத்திற்கு முடிவு எங்கிருக்கிறது? அது கிடக்கட்டும். உன் புருஷருக்கு உடம்பு குணந்தான? அவர் வயது சென்றவராயினும் உனது மங்கலிய பலத்தினுல் குண மடைந்து எழுந்திருக்க வேண்டும். உன் உடம்பு கேவலமாக இளைத்து விட்டதே! உனக்கும் தேக சுகம் சரியாக இல்லையா!" என்று மெல்ல தளுக்காக வார்த்தையை விட்டாள்.

இது கேட்ட ஜெயமணி பேசுவதற்கே பிடித்த மில்லாது தீராத இழவாக பேசத் தொடங்கி, "உம். என் உடம்பைப் பற்றிக் கேள்வி என்ன? கடவுளின் கருணையால் என் கணவருக்குக் குண மானல் போதும்" என்று மேலே பேச மனமின்றி நின்றுவிட்டாள்.

பாகீரதி:—ஜெயமணீ! என்னுடன் பேசுவதற்கு, உன் மனம் இன்னும் பழங் கதைகளை மறக்கவில்லை என்று தெரிகின்றது. நாம் ஒரு காலத்தில் விரோதிகளாக இருந்தவர்களானும் இப்போது நாம் விரோதிகள் அல்ல. இனி நாம் சமத்வமான சிநேகிதர்களாக இருக்கவேண்டும். உன்னுடைய சிநேகிதத்தையும் தயவையுமே நாடி நான் வந்தேன். நீ மனங்கோணுது என்னுடன் பேசவேண்டும்.

ஜெயமணி:—எனக்கு யார்மீதும் கோபமில்லை; தாபமில்லை. தாங்கள் என்னை நாடி வரவேண்டிய அவசியமான காரியம் என் னிடம் யாதிருக்கின்றது. என்னல் இப்பூமண்டலத்தில் ஒருவருக் கும் ஒரு காரியமும் கிடையாது.

பாகீரதி:—ஜெயமணீ! நீ இன்னும் பழய மாதிரியான நினை வுடன் பேசுகிருய். உன்னல் காரியம் ஆவது உனக்கே தெரியுமா! காரியத்தைப் பெற்றவர்களல்லவா அதைக் கூறவேண்டும். உன்னல்

எங்கள் குடும்பத்திற்கே ஓர் பெருத்த காரியம் ஆகவேண்டும். ஏன்? எங்கள் குடும்பத்தின் விளக்கை நீ தான் ஏற்றவேண்டும்.

ஜெய:—ஆகா! இதென்ன வார்த்தை! உங்கள் குடும்பத்திற்கும் எனக்கும் என்ன சம்மந்தம்? என்னிடம் இந்த வார்த்தைகளெல்லாம் வேண்டாம். எனக்குக் காரிய மிருக்கிறது; நான் செல்ல வேண்டும்.

பாகீரதி:—என்ன ஜெயமணீ! உன்னுடைய மனம் இன்னமும் திரும்பவில்லை. எங்களை நீ இனிமேல் அன்னியராக எண்ணலாகாது. என் தாய் தந்தையின் உயிரை நீ காப்பாற்றவேண்டும்.

ஜெய:—கடவுளே அன்னியராக வைத்துவிட்ட பிறகு இனி ஒன்ருக எண்ணுவது திரிந்த பாலைத் தித்திக்கச் செய்வது போல விருக்கிறது. உன் பெற்ருேர்கள் பிழைப்பதற்கு நான் என்ன கடவுளா!

பாகீரதி:—ஜெயமணீ! நீ இவ்விதம் சொல்லலாகாது. என் பெற்ருேர்கள் பிழைப்பதற்கு நீ கடவுளேதான். நாங்கள் அப்படிதான் எண்ணி இருக்கிருேம். என் அண்ணன் சாருகாஸனுக்கு உன்னையே மணஞ் செய்திருக்க வேண்டியது; அது எந்த சாபக்கேட்டினுலோ தட்டிவிட்டது. அதை இனி எண்ணிப் பயனில்லை. அவன் அதே மூர்க்கமாக பிடிவாதம் செய்கிருன். வேறு மணம் செய்துகொள்ள மனத்திலும் எண்ணவில்லை. அவன் ஒருவனே எங்களுடைய சந்ததிக்கெல்லாம் விளக்கு. ஆகையால் அவனை எவ்விதமாயினும் மணம் செய்துகொள்ளும்படியான வழியை நீ தான் செய்யவேண்டும். அவன் உன்னையே தெய்வமாக எண்ணி யிருப்பதனுல் உன் வாக்கைத் தட்டமாட்டான். சதா காலமும் உன்னுடைய சிந்தனையாகவே இருக்கிருன். இந்த பேருதவியை நீ செய்தே தீரவேண்டும். உன் வாக்குத்தான் அவனுக்குப் பொன் வாக்காகத் தோன்றும்.

ஜேய:—இதென்ன வார்த்தை! உன் அண்ணனை விவாகம் செய்துகொள்ள வேண்டாமென்று நான் சொல்லி திட்டம் செய்

திருக்கிறேனு! மகாராஜனுக மணந்து மகிழட்டுமே! எனக்கென்ன வந்தது. என்னிடம் ஏன் கூறவேண்டும்? இவ்விதமான வார்த்தை களுக்கு என்னுல் பதில் கூற முடியாது. நான் செல்ல வேண்டும்.

பாகீரதி:—ஜெயமணி! அவ்வாறு சொல்லாதே! அவனை விவாகம் செய்துகொண்டுதான் தீரவேண்டு மென்று நீ பிடிவாதமாக சொன்னுல் அவன் உன் வார்த்தைக்குக் கட்டுப் பட்டேனும் மணப் பான். சென்றது சென்றுவிட்டது. இனிமேல் நடக்கவேண்டி யதைத்தான் கவனிக்கவேண்டும். நீ இவ் விஷயத்தில் உபகாரம் செய்தால் உன்னை உலகம் கொண்டாடும்; நீயும் வசைக்கு ஆளாகா மலிருப்பாய்.

ஜெய:—என்ன! என்ன! வசைக்கு ஆளாகுவதா! என்னை யார் வசை கூறவேண்டும்? நான் யாருக்குத் தீங்கிழைத்தேன். என்னைப் பற்றி நீ இவ்விதம் பேசவேண்டாம்.

பாகீரதி:—கோபிக்காதே யம்மா! உலகத்தின் தன்மையைக் கூறினேன். உலக வசையைத் தெரிவித்தேன். நீ கிழவனை மதியாமல் சாருகாலனையே வைத்துக்கொண்டிருப்பதாயும், இன்னும்யாரையோ வைத்திருப்பதாயும் உலகத்தில் வதந்தி உலவி வருகிறது. ஆனுல் நான் அதை நம்பவில்லை. உன்னுடைய மாசற்றத் தன்மையை நானறிவேன். என் அண்ணனின் குணத்தையும் நானறிவேன். உலகத்தவர்க்கு உளறுவதற்கு ஏதேனும் வேண்டுமா, இல்லையா! அதை நாம் ஏன் நினைக்கவேண்டும். நீ, சாருகாலனை விவாகம் செய்துகொள்ளும்படியான மார்க்கம் செய்துவிட்டால் போதும். பிறகு உன்னை வசை தாக்காது.

ஜெய:—என்ன சொன்னுய்! சாருகாலனை நான் வைத்திருக் கின்றேனு! இவ்விதமான கொடிய வார்த்தைகளால் என்னை இம்சிப் பதற்குத்தான் நீ இவ்விடம் வந்தாயோ! அவன் எந்த தேசத்தி லிருக்கிறுன், நான் எந்த தேசத்திலிருக்கிறேன். சொல்கிறவர் களின் கண்ணவிந்து விடவேண்டும். ஏன் உலகம் கூறுவதாகப் பொய்யுரைக்கவேண்டும்? உலகத்தவர்களுக்கு உங்களைப் போன்ற கன்மனம் இருக்காதென்றே நான் திட்டமாகக் கூறுவேன். அவனைப்

பார்த்தும் எத்தனை வருடங்களாய் விட்டன வென்பதை முதலில் தெரிந்துகொண்டல்லவா வசையைத் தொடங்கி இருக்கவேண்டும். சிச்சி! இந்த ஆபாஸ வார்த்தையை என் காதில் போடவேண்டாம்; நீ எழுந்து செல்லலாம். நான் பரிசுத்தமாயிருப்பினும், அபரிசுத்த மாக விருப்பினும் என்னைக் கடவுள் பார்த்துக்கொள்வார்.

பாகீரதி:—ஜெயமணி! எது. உலகத்தின் வதந்தி என்றால் என்மீதே திருப்பிவிட்டாய்! நானு உன்னைக் கூறுவேன்? சரிதான். நீ இவ்விவாக விஷயத்தில் நான் சொல்வது போலக் கேட்கா விட்டால் நானும் அப்போது உன்மீது குறை கூறித் தூற்றுவேன். நீ இவ்விடத்திலேயே இருந்து எனக்கு இவ் வுதவியைச் செய்ய வேண்டும். நீ உன் கரத்தினல் ஓர் கடித மெழுதி என்னிடம் கொடுக்கவேண்டும். சாருகாஸனிடம் அதை நான் சேர்த்துவிடு கிறேன். அவனுடைய மனம் திரும்பும்படியாக எழுதவேண்டும். நீயும் அவனும் இனிமேல் சென்றவைகளை எண்ணிச் சிந்தித்துப் பயன் யாது. இனி அவ்வாறு சிந்திப்பதும் பாபமே! ஆகையால் அவ்வாறான எண்ணத்தை மாற்றி எழுதிக் கொடுக்கவேண்டும். இல்லையேல் நான் போகமாட்டேன்.

ஜெய:—ஐயோ, கஷ்டகாலமே! இதென்ன உபத்திரவமாக விருக்கிறதே! நான் படும் துயரம் போதாமல் இவளுடைய இம்சை யும் சேரவேண்டுமா!—என்று தனக்குள் எண்ணியவாறு பேசத் தொடங்கி "நீ என்னை வேண்டுமென்று பழிப்பதற்காகவே வந்திருப் பதாகத் தெரிகின்றது. இவை எல்லாம் நன்றாக இல்லை. நான் எதற்குக் கடித மெழுதவேண்டும்? அவன் விவாகம் செய்துகொள் வதை நான் தடுத்தால்தானே அதற்கு நான் பரிகாரம் செய்ய வேண்டும். வீணே என்னை ஏன் உபத்திரவிக்கவேண்டும்?

பாகீரதி:—ஜெயமணி! அவன் உன் வார்த்தைப்படியே நடக்கக் கூடியவனாகையால் நீயே இதில் ச்ரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அவனை விவாகம் செய்துகொள்ளும்படியாகச் செய்ய வேண்டிய சக்தி உன்னிடமே இருக்கிறது. ஆகையால் நீ இதற் குத் தடை கூறாது நான் கேட்டபடி கடிதம் தரவேண்டும். அந்தக்

கண்டிப்பான கடிதத்தைக் கண்டுதான் அவன் மணம் செய்து கொள்ளவேண்டும். தெரிந்ததா! சாருகாலன் விவாகம் செய்து கொண்டால்தான் நீ இனி அவனோடு பேசுவாய் என்று அக் கடிதத்தில் காட்டவேண்டும். அவ்வாறிருப்பின் அவன் கட்டாயம் மணப்பான்.

ஜேய:—இதென்ன வார்த்தை! நான் அவனை திட்டம் செய்யவாவது. அவன் யார், நான் யார்? இந்த வார்த்தைகள் என்னிடம் வேண்டாம். அவன் விவாகம் செய்துகொண்டு சுகஜீவியாகவிருக்கக் கூடாது என்று யார் தும்மினுர்கள். என்னுல் அவ்விதம் செய்ய வியலாது. நீ எழுந்து செல்லலாம்.

பாகீ:—நான் இதற்கு ஒரு முடிவு செய்து கொள்ளாது திரும்ப மாட்டேன். நீ எப்படியாவது தயவு செய்து எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றவேண்டும். என் பெற்றோர் படும் துயரத்தைப் பார்த்தால் நீயும் சகிக்கமாட்டாய். உன்னை என்ன கஷ்டம் செய்கிறேன். ஒரு கடிதம் எழுதிக்கொடுக்க முடியாதா! அந்த உபகாரம் செய்வதற்கு உன்னுல் முடிந்தும் மறுக்கலாகுமா!

ஜேய:—(சற்று யோசித்தாள்; அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ஆகையால் பாகீரதியை நோக்கி) என்னுல் இப்போது ஒன்றும் செய்யவியலாது; நீ சென்றுவா!—என்று கூறிக்கொண்டே அங்கில்லாது சடக்கென்று எழுந்து சென்றுவிட்டாள். அவ்வாறு செல்வதைக் கண்ட பாகீரதி "அம்மா! நீ நன்ருக யோசனை செய்து நாளைக்குக் கொடுத்தால் போதும். நான் நாளைக்கு வருகிறேன்" என்று கூறிக்கொண்டு போய்விட்டாள்.

ஜெயமணிக்கு அன்று காலையிலிருந்து ஒன்றன்பின் ஒன்ருக நடக்கும் இவ்விசித்திர சம்பவங்களால் மனம் நொந்து வருந்திக் குழம்பிவிட்டது. இந்த வெட்கக்கேடான விஷயத்தை எண்ணி மனங் தவித்தாள். அதையும் தன் கணவரிடம் கூருது அவருக்கான பணிவிடைகளைச் செய்துவிட்டு அவரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு தன் தோழியாகிய சின்னம்மாளின் வீட்டிற்குச் சென்ருள். அங்கு சின்னம்மாள் ஜெயமணியின் முகத் தோற்றத்தைக் கண்டு

திடுக்கிட்டவளாய் "ஜெயமணி! உன் கணவருக்கு உடம்பு எப்படி இருக்கிறது? குணந்தானே! என்ன விசேஷம்! உன் முகம் ஏதோ ஒருவிதமான மாறுதலே யடைந்திருக்கின்றதே; என்னம்மா! ஜெயமணி!" என்று அன்பொழுகக் கேட்ட வண்ணம் அவளை அழைத்துக்கொண்டு ஒரு அறையில் சென்று அமர்ந்தாள்.

ஜெயமணிக்கு அப்போதுள்ள மனத்துயரத்தினால் எதுவுமே தோன்றாது கண்ணீர் சிந்திய வண்ணம் அவள், சின்னம்மாளின் பக்கலில் உட்கார்ந்துவிட்டாள்.

சின்ன :—ஜெயமணி! ஏனம்மா புலம்புகின்றாய்? என்ன செய்தி? சீக்கிரம் உரைப்பாய்.

ஜெய :—சின்னூ! நான் என்னவென்று கூறுவேன்? என்னுடைய எல்லாக் கஷ்டங்களும் போதாதென்று புதிது புதிதாக வந்து லபிக்கின்றதே! என்ன செய்வேன்?—என்று காலே டாக்டர் விஷயமாக நடந்த சம்பவத்தைக் கூறினாள். இது கேட்ட சின்னம்மாள் கட்டுமீறிய ஆத்திரத்துடன் "ஆகா! அந்த சோமநாதனா அப்படிச் செய்தான்! அவன் பரம யோக்யன் என்று எண்ணினேனே! அவனுடைய அயோக்கியத்தனம் இப்போதல்லவா தெரிகிறது. சீச்சீ! இனிமேல் நீ அவனிடம் மருந்து வாங்காதே; நானும் விட்டு விடுகிறேன்." என்று கோபத்துடன் மொழிந்தாள். பிறகு ஜெயமணி மீண்டும் பேசத் தொடங்கி, பாகீரதி வந்து சென்ற சகலமான விவரங்களேயும் கூறிப் பின், "சின்னூ! இந்த க்ரகசாரம் எங்கேனும் உண்டா! நான் எங்கேயோ ஓர் மூலேயில் கிடந்தால் என்னை ஏன் வந்து சனியன் பிடிக்கவேண்டும்? இதற்கு என்ன செய்வதென்று கேட்கும்பொருட்டே இங்கு வந்தேன். என்ன சொல்கிறாய்!" என்று நிரம்பவும் வருந்தியவாறு கேட்டாள்.

இது கேட்ட சின்னம்மாள் கூறவியலாத வியப்பும், திகைப்பு மடைந்து "இதென்ன ஆச்சரியம்! ஒன்றன்பின் ஒன்றாகவல்லவா வருகின்றது. இதென்ன க்ரகசாரம்! எனக்கு ஒன்றுமே தோன்றவில்லையே! அவர்களோ கொலே செய்யவும் அஞ்சாத கிராதகர்கள்,

அவர்கள் எந்த காரியத்தையும் மனந்துணிந்து செய்யக்கூடிய வர்கள், வேண்டுமென்றே உன்மீது இல்லாத பழிகளைச் சுமத்தி உன்னை மானபங்கம் செய்தாலும் செய்வார்கள். ஆகையால் அவள் கேட்டது போல ஒரு கடிதம் எழுதிவிடுவதுதான் நல்லது. சட்டி சுட்டது; கையை விட்டது. என்பது போல அவர்களுடைய சம் மந்தம் அத்துடன் விட்டுத் தொலையட்டும் என்று எனக்குத் தோன்று கின்றது. நீ நன்ருக யோசித்து உன்னிஷ்டப்படி ஒரு கடிதம் எழுதி அவர்கள் பிரித்துப் படிக்காவண்ணம் ஸீல் வைத்து அனுப்பி விடு.'' என்ருள். இந்த வார்த்தையை ஆமோதித்த ஜெயமணி பின்னும் சிறிது நேரம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்து பிறகு வீட்டிற்குச் சென்ருள். அவள் மனம் மிகவும் குழம்பிப்போய்விட்டதால் எதுவும் தோன்ருமல் தத்தளித்தவாறு இருக்கின்ருள். தான் சாருகாலனுக்கு எந்த விதம் கடிதம் எழுதுவது என்பதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள். இச் செய்தியை தன் பர்த்தாவிடம் கூறலாமா, வேண்டாமா! என்கிற ஒரு பெருத்த யோசனை மனத்தில் ஒரு புறம் போராடுகின்றது. இவ் விஷயங்களை எல்லாம் அவள் தன் தாயா ருடன் கூடத் தெரிவிக்கவில்லை. அன்று இவ்விதமான துன்பங் களினுல் போஜனத்தையும் வெறுத்தாள். அன்றே தன் கணவனின் சிகிச்சைக்காக வேறு டாக்டரைத் தருவித்துவிட்டாள். சோம நாதனுடைய சம்மந்தமே இனிமேல் வேண்டாம் என்கிற ஒரு ஆத்திரம் பொங்கிவிட்டது. ''நாளைய தினம் பாகீரதி வந்துவிட் டால் என்ன செய்வது? உம். சின்னு தெரிவித்தது போல ஒரு கடிதம் எழுதியே கொடுத்துவிடுவோம்'' என்று யோசித்துப் பின் எழுத உட்கார்ந்தாள்.

''என் அன்பான சாருகாலா! நான் ஒரு பாபமும் அறியா மலிருக்கையிலேயே என் மீது பழி சாருகின்றது. உனக்கும் எனக்கும் ரகஸியமான நேசமும், சம்மந்தமும் இருப்பதாக உலகத்தவர் கூறுகிருர்களென்று உன் தங்கை பாகீரதி என் னிடம் கூறினுள். நான் ஒருவிதத்திலும் அத்தகைய குடிகேடி யல்லவென்பதை நீயேனும் தெரிந்துகொள். உன்னுடைய விவாகத்திற்கு நானே தடையாக இருப்பதாய் உன் மனிதர்

களின் அபிப்ராய மென்பதைத் தெரிந்துகொண்டேன். என் னைக்கோ விட்டு முறிந்த உறவை மீண்டும் கொண்டாட வேண்டுமென்றும் இன்னும் ஏதேதோ கூறிக்கொண்டும் உன் தங்கை என்னிடம் வந்தாள். உன்னுடைய விவாகத்திற்கு நான் தான் ஜவாப்தாரியாம். நான் உன்னை விவாகம் செய்து கொள்ள வேண்டாமென்று தடுத்துவிட்டதாக அவர்களுடைய தீர்மானம். நான் எப்போதேனும் அவ்வாறு சொல்லிய துண்டா? உன்னை மணம் செய்துகொள்ளும்படியாக உனக்கு நான் எத்தனை தரம் சொல்லி யிருக்கிறேன். அவைகளை நீ கேட்டாயா! இப்போது என்னுடைய இஷ்டத்தை உனக்கு நான் எழுதி உன்னைக் கட்டாயஞ் செய்து விவாகத்தை முடிக்க வேண்டுமாம். அவ்வாறு நான் செய்யாவிட்டால் என்மீது இல்லாத பழிகளைக் கூறி வசைக்காளாக்குவார்களாம். ஆகை யால் நான் இதை உனக்கு எழுதி யனுப்புகிறேன். நீ இனி யேனும் மணம் செய்துகொண்டு மங்களகரமாக வாழ்வாயாக. பாவி என் மேலுள்ள பழி இனியாவது அகலட்டும். இச் சமயம் உனக்கு அதிகம் எழுதக் கூடவில்லை. இத்துடன் நிறுத்துகிறேன். பாவி யான் பலவிதத்திலும் இம்சைப் படு வதற்கென்றே பிறந்தேன். நீயேனும் சுகப்படுவாய்.

இங்ஙனம்
ஜேயமணி

என்றதை வரைந்து கவரில் வைத்து, அரக்கு முத்திரை யிட்டுக் கவரை உடைக்கமாட்டாத விதமாக பத்திரப் படுத்தி பெட்டியில் வைத்தாள். அவளால் அறிந்துகொள்ளக்கூடாத அபாரமான துயரத்தினால் வாடி வாடி வதங்கி, முகம் சுருங்கி, கண்கள் இடுங்கி குழிவிழுந்து, தேகமே துவண்டு ஓர் விதமான மாறுதலுடன் அன்றைய பொழுதைக் கடத்தினாள்.

மறுநாள் பாகீரதி அதிகாலையிலேயே வந்துவிட்டாள். அவள் முகத்தைப் பார்க்கவும் ஜெயமணிக்குப் பிடிக்கவில்லை; எனினும் அவள் சற்று கடுத்த முகத்துடன் "பாகீரதி! நீங்கள் எல்லோரும் ஒன்று கூடி யோசனை செய்துகொண்டு, என்னைப் பயமுறுத்திக் கடிதம் வாங்க வந்திருக்கிறாய் என்பது எனக்கு விளங்கிவிட்டது. இவ்விதமான பூச்சி மிரட்டலுக்கு நான் என்றும் அசைந்தவளன்று. என்னுடைய குல தெய்வத்திற்குப் பொதுவாக நான் நடக்க என்றும் கடமைப் பட்டவள் என்பதை நம்பு. நான் உன்னுடைய மிரட்டலுக்காக இப்போது கடிதம் கொடுப்பதாக எண்ணாதே! சாருகாஸன் விவாக மின்றி வீணாக வாணாளைக் கழிக்கச் செய்து விட்ட உங்களுடைய பரிதாபத்திற் கிரங்கி கடிதம் கொடுப்பதாயும்

எண்ணுதே! இன்னும் கேட்டால் உங்கள் விஷயத்தில் சற்றும் இரக்கமின்றியே இருக்கவேண்டுவது அவசியம். ஏதோ விவாக விஷயமானது மங்களகரமாயிற்றே; அதற்குத் தடை செய்யலாகா தென்று இதோ கடிதம் கொடுக்கிறேன். இதை இப்படியே பிரிக்காமல் முத்திரையுடன் சாருகாஸனிடம் சேர்ப்பிக்கவேண்டும்' சரி! நீ இனி செல்லலாம். இங்கு வரவேண்டாம்" என்று கூறிய வாறு கடிதத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு அங்கு நிற்காமல் அப் போதே உள்ளே போய்விட்டாள்.

கடிதத்தைப் பெற்றுக்கொண்ட பாகிரதி சந்தோஷமடைந்து அவ்விடத்திலிருந்து புறப்பட்டு அன்றே தன் ஊருக்கு வந்து சேர்ந்தாள். தன் மகள் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு வந்து விட்ட சந்தோஷத்தினுல் தாயும் தந்தையும் பூரித்தார்கள். சாரு காஸனுக்கு பாகிரதி செல்வதற்கு முன்னரே தந்தி யடித்தாய் விட்டதால் அவன் அன்று மறுநாளே வரக்கூடும் என்று எதிர் பார்த்திருந்தார்கள்.

சாருகாஸன் மனக் கலக்கத்துடன் தன் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கையில் இவர்கள் அடித்த தந்தி கிடைத்தது. அதைக் கண்ட அவன் உண்மையிலேயே தன் தாயாருக்கு முடிவு காலம் சமீபித்துவிட்டதாக எண்ணி வருந்தியவாறு அன்றே ப்ரயாண மாகி தன் ஊருக்குக் குறித்த நேரத்தில் வந்து சேர்ந்தான். சாரு காஸன் தந்தியைக் கண்டு எப்படியும் வருவான் என்பதை நன்கறிந்த அவன் தாயார் உண்மையில் நோய் கொண்டவள் போல பாசாங்கு செய்தவாறு படுத்திருந்தாள். சாருகாஸனும் தன் வீட்டை யடைந்ததும் தன் தாயாரைத் தேடியே சென்றான். வெளியிலிருந்த பாகிரதி "அண்ணு! ஏதோ உன்னுடைய அதிர்ஷ்ட வசத்தினுல் நமது அன்னையின் முக தரிசனம் உயிருடன் கிடைத் தது எனலாம். அன்னை இறந்திருந்தால் இன்று 5 நாட்களாகி இருக்கும். இப்போது சற்று குணமாகவே இருக்கிறது. வா!" என்று கூறிக்கொண்டே உள்ளே அழைத்துச் சென்றாள்.

பாசாங்கு செய்து படுத்திருக்கும் தாயார் மகனைக் கண்டதும் அலறி அழுதவாறு "ஆ! என் மகனே! சாருகாஸா! உன்னை இனி பார்க்கப் போவதில்லை என்று தீர்மானித்துவிட்டேன். இப்போது நான் புனர் ஜென்மம் எடுத்தது போலவே இருக்கிறேன். என் சாருகாஸா! என்னுடைய ப்ராணன் போகும் சமயத்திலுள்ள இந்த வேண்டுகோளையேனும் நீ பூர்த்தி செய்யமாட்டாயா! உன்னை மணக் கோலத்துடன் நான் என்று காண்பேனடா! என் மனக் குறையைத் தீர்க்கமாட்டாயா! இதே கவலையால் நான் நோய் வாய்ப்பட்டுவிட்டேனே யன்றி எனக்கு வேறு நோயில்லை" என்று

மெல்ல அப்போதே வார்த்தையைக் கலந்துவிட ஆரம்பித்து விட்டாள்.

இதுகேட்ட சாருகாஸன் "அம்மா! ஏதோ நான் செய்த சிறு புண்ணியத்தினால் உன்னை நல்ல நிலைமையில் கண்டேன்; என் மனம் நிம்மதியாயிற்று. மற்ற வார்த்தைகள் என்னிடம் பேசாதே! நான் இன்றே சென்று வருகிறேன். கடவுளின் கிருபையால் நீ பூர்ண சுக மடைந்துவிட்டால் போதும். இனிமேல் என்னைப் பிணக் கோலத்துடன் கண்டு களிக்கவேண்டுமே யன்றி மணக் கோலத்தில் காண முடியாது. அதற்கு நான் அருகதை யல்ல என்று சிறிது கோபத்துடனும் வெறுப்புடனும் கூறினன்.

தாயார்.—அடேய்! என் மைந்தா! இவ்விதமான பதிலை இந்த சமயத்திலா சொல்வது? ஐயோ! என்னுடைய நிலைமை உனக்குத் தெரியவில்லையா! இனி சென்றதை ஏன் எண்ணிச் சிந்திக்க வேண்டும். அதை மறந்துவிடுவதன்றோ முறையாகும். என்மீது உனக்குத் தயவில்லையா!

சாரு:—அம்மா! தாங்கள் அப்படிக் கூறவேண்டாம். என்னுடைய கடமையாவது உங்களிருவருக்கும் கர்மக்ரியைகளைச் செய்துவிடுவதே யாகும். அது வன்னியில் இனி வேறு ஒன்றுமில்லை இதுவே என்னுடைய கண்டிப்பான தீர்மானம்.

தாயார்:—அடேய், சாருகாஸா! ஐயோ! இந்த வார்த்தை கேட்கவோ நான் உன்னை வரவழைத்தது. வேண்டாம்; தடுக்காதே! இப்போது இவ்வார்த்தைக்குச் சமயமல்ல. உன்னை ஈன்ற தாயாராகிய என் வார்த்தையைத் தட்டாதே! நான் இப்போது ஒரு பெண்ணைப் பேசி நிச்சயம் செய்திருக்கிறேன். நாளைய மறுதினம் ஒரு முகூர்த்த நாள் இருக்கிறதாம். அந்த நாளில் விவாகத்தை முடித்துவிடுவோம். பெண்ணின் அழகைக் கூறவேண்டாம். ஜெயமணியைவிடப் பதின் மடங்கு அதிகரித்த அழகுடன் விளங்குகின்றாள். உன்னை நான் என்னுடைய உடம்பு நிமித்தமாயும், இந்த விவாக நிமித்தமாயும் தான் வரவழைத்தேன். நீ எவ்விதமேனும் இவ் விவாகத்தைப் பூர்த்தி செய்துவிடவேண்டும்" என்றாள்.

அதற்குள் பாகீரதி தன் தாயை நோக்கி "அம்மா! இதென்னம்மா! உனக்கு ஒன்றும் தெரியவில்லை. அண்ணா ஊரிலிருந்து வந்தவுடனே பெரிய வார்த்தை மூட்டையை அவிழ்க்கிறாய். "அவன் போஜனம் செய்யவேண்டாமா! பிறகு பேசிக்கொள்ளலாம். அண்ணா! நீ எழுந்து ஸ்நானம் செய்ய வா! அதோ அப்பாவும் வந்துவிட்டார். "அப்பா! அண்ணா ஊரிலிருந்து வந்துவிட்டான்" என்றாள். இதுகேட்ட சாருகாஸன் எழுந்து தன் தந்தையை

வணங்கினுன். அவருடன் ஏதோ சிறிது நேரம் பேசிவிட்டு ஸ்நானம் செய்து போஜனத்தை முடித்துக்கொண்டு வந்தான். அவன் தாயாரைப் பார்க்கும்போதே அவளுக்கு தேகத்தில் ஒரு விதமான சிக்கு மில்லை என்று தெரிந்துகொண்டான். அதை நன்கறியும் பொருட்டு அவளை நன்ருக கவனித்து நாடி முதலிய பார்த்து சோதித்ததில் அவளுக்கு ஒருவிதமான உடம்பு மில்லை. இது வேண்டுமென்று விவாக விஷயத்திற்காக அடித்த தந்தி என்று கொடியில் யூகித்தறிந்துகொண்டான். அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் தான் அன்று இரவு மெயிலுக்கே புறப்படவேண்டு மென்று தீர்மானித்துக்கொண்டான். பிறகு இவன் போஜனம் செய்து உட்கார்ந்திருந்த சமயம் அவனுடைய தாயார், தகப்பனுர், தங்கை முதலியோர்கள் அருகில் வந்து பின்னும் விவாகப் பேச்சையே எடுத்துப் பேசத் தொடங்கித் தாம் நிச்சயித்திருக்கும் விஷயங்களை எல்லாம் கூறி அந்தப் பெண்ணையும் அவள் தகப்ப னுரையும் அவ்விடம் வரச் செய்து "இந்தப் பெண் தானப்பா! செவ்வையாகக் கவனித்துப் பாரு. உன் ஜெயமணியைவிட அழகுடையவளா! இல்லையா!'' என்று கேட்டார்கள்.

இந்த ஏற்பாட்டை எல்லாம் பார்த்த சாருகாஸனுக்குத் தான் நினைத்தவாறே தன்னை விவாகத்திற்கென்று வரவழைத்திருப்பதை நன்கறிந்துகொண்டான். அப்போது அவர்களுக்கு ஒன்றுமே பதில் பேசவில்லை. அந்தப் பெண்ணைக் கண்ணெடுத்தும் பார்க்க வில்லை. அவள் பிதாவுடன் ஒரு பேச்சும் பேசவில்லை. வெகு பொறுமையுடன் உட்கார்ந்திருந்தான். அந்தப் பெண்ணின் பிதா தாமாக வலுவில் சாருகாஸனை அழைத்துப் பேசியதற்கு மட்டும் பதிலளித்தான். அவர்கள் மிகவும் த்ருப்தி கொண்டு விவாக விஷயமாகவே வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து பின்னர், அவர்கள் காலைய மறுநாளே முகூர்த்தத்தை முடிப்பதென்று தீர்மானம் செய்துகொண்டு போய்விட்டார்கள்.

இவைகளை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சாருகாஸனுக்கு உண்மை நன்ருக விளங்கிவிட்டது. இனி இவ்விடத்திலேயே தங்கலாகாதென்று தனக்குள் முடிவு கட்டிவிட்டான். அவனுடைய தாயார் மகனை நோக்கி "சாருகாஸா! இந்தப் பெண்ணைப் பார்த் தாயா! எப்படி இருக்கிருள்?'' என்ருள்.

சாரு:—அம்மா! நான் பெண்ணையும், பிள்ளையையும் பார்க்க இவ்விடம் வரவில்லை. எந்தப் பெண் எவ்வித மிருப்பின் எனக் கென்ன. என் ஜெயமணியின் நகத்தின் எழிலுக்குச் சமானம் மற்றய பெண்களின் முகமும் இல்லை என்பதை நான் பல தரம் கூறு வேன். அவைகளைப் பற்றி இப்போது ஏன் பேசவேண்டும்?— என்று கூறி முடிப்பதற்குள் அவன் தாயார் பேசத் தொடங்கி

"என்ன! என்ன! உன் ஜெயமணியின் நகத்தின் அழகு மற்ற பெண்களின் முகமில்லையா! பேஷ்! நன்முகச் சொன்னுய்! ஜெயமணி ஒருத்திதான் இப் பூவுலகில் அழகே உருக்கொண்டு வந்திருக்கிருளோ! அப்படித்தானுகட்டும். இனிமேல் அதைக் கூறி என்ன பயன். உன் ஜெயமணியே இந்தப் பெண்ணை மணக்கும்படியாகக் கூறினுல் அப்போதேனும், அவள் வார்த்தைக்கேனும் கட்டுப்பட்டு மணப்பாயா?" என்று தந்திரமாகக் கேட்டாள்.

சாரு:—இதென்ன கேள்வி? அவள் என்னை மணக்கவேண்டாமென்று தடை செய்தாளா! அவள் பேச்சை ஏன் எடுக்கவேண்டும். அவள் இனி ஆயுள் பரியந்தம் இவ் வீட்டு வாயிலையும் மிதிக்க மாட்டாள். நீங்கள் பார்க்கும் பெண்ணையும் பார்க்கமாட்டாள். உங்கள் முகத்தில் விழித்துப் பேசவும் மாட்டாள். இதெல்லாம் என்ன கனவு பேச்சு?

தாயார்:—ஆகா! அவள் எங்களோடு பேசமாட்டாளா! பேஷ் அவளே சில தினங்களுக்கு முன்னர் பாகீரதியைக் கண்டாளாம்; மிகவும் விசாரித்துப் பேசினுளாம். பாகீரதி நாங்கள் படும் துன்பத்தைக் கூறி வருந்தினுளாம். அதற்கு ஜெயமணியே உன்னை எப்படியாவது மணக்கும்படியாகச் செய்து எங்கள் குறையைத் தீர்ப்பதாகக் கூறி உனக்குக் கடித மெழுதுவதாகச் சொன்னுளாம். பாகீரதி "அக் கடிதத்தை என்னிடமே கொடு; அவன் சீக்கிரத்தில் வரப்போகிறுன்; நானே கொடுக்கிறேன்" என்முளாம்—உடனே அவள் கடிதம் கொடுத்துவிட்டாளாம். இதோ பார் கடிதம்" என்று ஜெயமணி கொடுத்த ஸீல் வைத்த கடிதத்தைச் சாருகாஸனிடம் கொடுத்தாள்.

இந்த வார்த்தையைக் கேட்ட சாருகாஸன் மிகவும் ஆச்சரிய பரிதனுக மாறிப்போய் "இவை எல்லாம் உண்மையாக நடந்திருக்குமா?" என்ற பெரும் வியப்பும் திகைப்பும் அடைந்து அந்தக் கடிதத்தைக் கையில் வாங்கிக்கொண்டான். அதில் வரைந்திருந்த விலாசம் தன் காதலியின் கையெழுத்தினுலென்பதை அறிந்து பேராச்சரிய மடைந்து அதை எடுத்துக்கொண்டு வேறு விடுதியில் சென்று ஸீலை உடைத்துக் கடிதத்தைப் படித்தான். அவன் ஆத்திரம் மிஞ்சிவிட்டது. "ஆகா! இதுபரியந்தம் அவர்கள் கூறியதெல்லாம் வெறும் கட்டுக்கதை என்பது நன்முக விளங்கிவிட்டது. இவர்கள் வேண்டுமென்று ஜெயமணியிடம் சென்று ஏதேதோ வார்த்தையாடி மிரட்டி உருட்டி இந்த கடிதத்தை வாங்கி யிருப்பதாக இந்த கடிதம் நன்கு கூறுகின்றது. இருக்கட்டும்; இவர்கள் இத்தகைய காரியங்களைச் செய்திருப்பதற்குத் தக்கபடி ப்ரதி செய்கிறேன்—என்று தனக்குள் கட்டு மீறிய சீற்றங் கொண்டு அவ் விடத்திலேயே படுத்துவிட்டான். ஜெயமணியை எண்ணிக்

கண்ணீர் விட்டான். எண்ணாததும் எண்ணி ஏங்கினன். தன் பெற்றோர்கள் இவ்விதம் செய்து விட்டதற்கு அவர்கள்மீது அடங்கா ஆத்திரங் கொண்டான். கண்கள் நெருப்புப் பொறிகளைக் கக்குகின்றன. தன் பெற்றோருடன் இது விஷயமாகப் பேசி விடுவோமா? என்றும் எண்ணினன். பின்னும் எதையோ யோசித்தவாறு தன்னை அடக்கிக்கொண்டான்.

சாருகாஸன் கடிதத்தைப் படித்துவிட்டு யோசிப்பதாக எண்ணிய அவன் பெற்றோர்கள் அவனாக வந்து பதில் கூறட்டும் என்று பேசாதிருந்துவிட்டார்கள். சாருகாஸனும் சிறிது நேரங் கழித்து எழுந்து ஒருவருடனும் பேசாமல் திடீரென்று வீட்டை விட்டு வெளியே சென்றான். அவ்வாறு சென்றவன் தனக்காகப் பேசியிருக்கும் பெண்ணின் வீட்டிற்குச் சென்றான். அந்த சமயம் அந்த பெண்ணும், பெண்ணின் தந்தையும் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் சாருகாஸனைக் கண்டதும் நிரம்பவும் சந்தோஷமான உபசாரத்துடன் வரவேற்று ஆசனத்தில் அமரச் செய்தார்கள். சாருகாஸனைக் கண்டதும் அந்தப் பெண் சற்று நாணமடைந்து உள்ளே செல்ல முயன்றாள். அதைக் கண்ட சாருகாஸன் அந்தப் பெண்ணை நோக்கி "அம்மா! நீ உள்ளே செல்லவேண்டாம்; உங்களிருவருடனும் நான் ஓர் முக்கியமான விஷயமாகப் பேசும் பொருட்டே வந்தேன்; ஆகையால் உட்காரு' என்றான்.

இதுகேட்ட அந்தப் பெண்ணின் தந்தை விவாக விஷயமாகத் தான் பேசிப் பெண்ணை நன்றாகப் பார்க்கும் பொருட்டாக சாருகாஸன் வந்திருக்கிறான் என்று எண்ணி, பெண்ணுடன் அவன் தனிமையிலேயே பேசி மகிழட்டும் என்ற நோக்கங்கொண்டு அதை வெளியிடாமல் தன் பெண்ணை அழைத்து உட்காரச் செய்தார். சாருகாஸனை நோக்கி "என்ன சார்! பெண் உங்களுக்குச் சம்மதந் தானே!" என்றார்.

சாரு:—ஐயா! நான் சொல்லப்போகும் விஷயங்கள் உங்கள் மனத்தை முதலில் வருத்தக் கூடியதாக விருப்பினும் பிற்காலத்திய நலனை நோக்கின் அவை மகிழ்ச்சியாகவே மாறிவிடலாம். ஒரு விவாகம் செய்வதென்றால் ஆயிரம் காலத்து அழியாப் பயிர் என்று ஆன்றோர் கூறுவார்கள். அத்தகைய உன்னதமான விவாகமானது தம்பதிகளின் அன்யோன்யமான அன்பின் பிணைப்பாக இருந்தாலன்றி பிற்காலத்தில் மனமொத்த இல்லறம் நடத்த வியலாது. இந்த உண்மை யாவரும் அறிந்த விஷயமாகும். இவ்விதமான இன்பத்துடன் இல்லறம் நடத்த வேண்டியதற்குக் கடவுளின் அருளுடன் பெற்றோரின் ஆதரவும் சேர்ந்திருக்கவேண்டியது அத்யாவச்யமாகும். என்னுடைய வாழ்நாளின் இன்பகரத்திற்கு மட்டும் என்னுடைய பெற்றோர்கள் எனக்குப் பகையாளிகளாய்

விட்டார்கள். எனது மனத்தைக் கொள்ளை கொடுத்த விடத்தில் என் மனோபீஷ்டம் நிறைவேறாது, துள்ளித் தவிக்கச் செய்து என்னை ஆயுள் பரியந்தம் அவதிக்குள்ளாக்கி விட்டார்கள். என்னுடைய பரிதாபகரமான சரிதையைக் கூறவும் என் மனம் சகிக்கவில்லை. என்னுடைய வாழ்நாளில் நான் ஒரு சன்யாசியாகவே இருந்து என்னுடைய காலத்தைத் தொலைக்கும்படியாகக் கடவுள் என் தலையில் எழுதிவிட்டார் அதை நான் வெளிப் படையாகக் கூறிவிட்டேன். நான் இனி விவாகம் செய்துகொள்ள அருகதையல்லேன். என்னுடைய காதலை முற்றும் நான் வேறு இடத்தில் பறிகொடுத்துவிட்டுப் பரிதபிக்கின்றேன். மனத்தில் காதலின்றி—அன்பின்றி—ப்ரியமின்றி—ஒருவரின் தூண்டுதலுக்காக நான் மணத்தைச் செய்துகொண்டால் அதில் ஒரு சிறிது உபயோகமும் இல்லை. பிற்காலத்தில் உங்கள் மகளின் நலனை நீங்கள் கோர வேண்டுவது அவசியம். அதை முக்கியமாகத் தெரிவிக்கும் பொருட்டாக இங்கு வந்தேன். என்னுடைய அனுமதியைப் பெறாமல்—என் மனத்தின் போக்கை நன்கறிந்திருக்கையில், நானறியாதவாறு—இந்த விவாகத்தை நிச்சயித்து விட்டதை இப்போதே அறிந்தேன். நான் பிறருடைய உபத்திரவத்திற்காக மணத்தை முடித்தாலும் பிறகு வாழ்க்கை நடத்தமாட்டேன். ஒரு பெண்ணை வீணாக வதை செய்ய என் மனம் துணியவில்லை. என்னை வலிய காதலித்து விவாகம் செய்துகொள்ளும்படியாக வேண்டியவர்களுக்கும் நான் இதே மொழியைக் கூறினேன். என்னுடைய பாப வினையினால் நான் படும் துன்பம் போதும்; பிறரை வருந்தச் செய்ய மாட்டேன். உங்களுடைய நலனை உத்தேசித்து உங்களிடம் உண்மையை உரைத்துவிட்டுச் செல்லவே யான் வந்தேன். விவாகம் நடந்தபிறகு என்னைப் பழிப்பதில் பயனில்லை. நான் இம்மையில் ஏகாங்கியேயானேன். ஆகையால் அநியாயமான விஷயத்தில் தலையிடாதீர்கள். நீங்கள் வேறு இடத்தில் விவாகத்தை முடித்து விடுங்கள்; நான் சென்று வருகிறேன்" என்று கூறிவிட்டு அவர்களுடைய விடையை எதிர் பார்க்காமல் சரேலென்று போய் விட்டான்.

இந்த வார்த்தையைக் கேட்ட அவ்விருவரும் கூற வியலாத ஆச்சரியமும், ஒருவிதமான கிலேசமும் அடைந்து அசைவற்று நின்றுவிட்டார்கள். சாருகாஸன் அவ்விடத்திலிருந்து நேரே தன் வீட்டிற்கும் போகாமல் ரயில்வே ஸ்டேஷனை அடைந்து, அங்குள்ள (வெயிடிங்கு ரூமில்) ப்ரயாணிகள் தங்கும் அறையில் சென்று ஒரு கடிதம் எழுதி கவரிலிட்டு அதை அங்குள்ள தபால் பெட்டியிலேயே போட்டுவிட்டு டிக்கட்டு பெற்றுக்கொண்டு ரயிலேறி விட்டான். தன் காதலியின் கடிதத்திற்குப் பதில் எழுதவேண்டுமென்ற அவா தூண்டியது. அது விஷயமாகவே மனோ ராஜ்யம் செய்து

கொண்டே அவன் லாகூரை அடைந்தான். அங்கு சென்றதும் தன் காதலிக்கு ஓர் கடிதம் வரைந்து அதை அன்றே அனுப்பி விட்டான். தாங்க வியலாத துக்கமும், கலக்கமும், சித்றமும் அவனைக் கொண்டுவிட்டன. அந்த நிலைமையோடு அவன் தன் வேலையைக் கவனிக்கலானுன்.

இது இங்ஙன மிருக்க, சாருகாஸனுடைய பெற்றோர்கள் வெளியில் சென்ற தமது மகன் இன்னும் வரவில்லையே என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒருகால் அவன் தனது பழய சிநேகிதர்களைக் காணச் சென்றிருக்கலாம் என்று எண்ணி அவன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். மணி ஏற ஏற திகிலும், கலவரமும், குழப்பமும் அதிகரித்துப் பெருகிக்கொண்டே வருகின்றன. ஒருக்கால் சொல்லாமல் எங்கேனும் சென்றுவிட்டானே! என்ற யோசனை தூண்ட வாரம்பித்தது. இரவு மணி 10 அடித்து விட்டது. அதற்கு மேல் எதுவுமே தோன்றாமல் அவனுடைய நண்பர்களின் வீட்டில் தேட ஆரம்பித்தார்கள். எங்கு தேடியும் சாருகாஸன், 'இங்கு வரவே இல்லை.' என்ற சொல்லே கிடைத்து விட்டதால் அபாரமான வருத்தமும் சொல்ல வறியாத வேதனையும் அடைந்து, கடைசியில் 'பெண் வீட்டில் இருப்பானே!' என்று அங்கு விசாரிக்கச் சென்றார்கள்.

அவ்வாறு சென்ற வீட்டில் வீதிக்கதவு பூட்டப்பட்டிருப்பது கண்டு திடுக்கிட்டார்கள். உற்று கவனிக்கையில் (டுலெட்) காலி என்கிற சீட்டு தொங்குவதைக் கண்டார்கள். அவ்வளவு தான் அவர்களுடைய குடல் நடுங்க வாரம்பித்துவிட்டது. இவ் வீடு திடீரென்று பூட்டப் படவேண்டிய காரணம் யாதோ தெரியவில்லையே என்று வருந்தியவாறு அவ் வீட்டின் சொந்தக்காரரைக் கண்டு கேட்க அவர் வீட்டிற்குச் சென்றார்கள். அந்த சொந்தக்காரர் 'அவர்கள் தாங்கள் வந்த காரியம் தீர்ந்து விட்டதாயும் தமது சொந்த ஊருக்குச் செல்வதாயும் அட்வான்ஸ் பணத்தை எங்களையே எடுத்துக்கொள்ளும்படிக் கூறி விட்டு இன்றிரவு காலி செய்துகொண்டு சென்றுவிட்டார்கள். அவர்கள் ஊருக்குச் சென்றதும் உங்களுக்கு ரிஜிஸ்தர் கடிதம் எழுதுவதாக சொல்லச் சொன்னார்கள். இது தான் செய்தி'' என்றார். இந்த எதிர்பாராத வார்த்தையைக் கேட்ட அவர்கள் இடி விழுந்தவர்கள் போல நடுங்கிவிட்டார்கள், "ஐயோ! என்ன கலகங்கள் நடந்து விட்டதோ தெரியவில்லையே! சாருகாஸனையும் காணவில்லை. இவர்கள் ஊருக்குச் சென்ற பிறகு ரிஜிஸ்தர் கடிதம் அனுப்புவதாக ஏன் தெரிவிக்க வேண்டும்? ஐயோ! இதென்ன கஷ்டகாலம்! விவரம் ஒன்றும் தெரியவில்லையே!'' என்று குழம்பிப் போய் திகிலடைந்து விட்டார்கள்.

——:o:——

# காங்கிரஸ் 1930-31.

## காலண்டர்.

### படத்தின் அளவு 30" X 20"

இதுகாறும் காங்கிரஸ் மகா சபைக்கு தலைமைவகித்த தேச பக்தர்களின் உருவப் படங்கள் அமைந்துள்ளன. மேலும் பாரத மாதா படமும், கஜலக்ஷ்மி படமும் இருக்கின்றன. ஒவ்வொரு இல்லத்திற்கும் இன்றியமையாத உன்னத உருவப்படம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | காப்பியின் விலை | அணா | 0 | 9 | 0 |
| 3 | ,, ,, | ரூபா | 1 | 8 | 0 |
| 6 | காப்பிகளின் விலை | ,, | 2 | 12 | 0 |
| 12 | ,, ,, | ,, | 5 | 0 | 0 |

தபாற் சிலவு 1 முதல் 12 காப்பி வரை அணா 4

**சர்மா & கம்பெனி,**

திருவல்லிக்கேணி, : : சென்னை.

---

# ஹஸ்தரேகை சாஸ்திரம்

உமது கையிலிருக்கும் கோடுகளைக் கவனித்தீரா? உமக்கு வரப்போகும் நிகழ்ச்சிகளை அறிய ஆசையுண்டா?

அப்படியாயின், இப்புத்தகத்தை வாசியுங்கள். நீரே உமது சோதிடராவீர், மற்றவருடைய உதவி இல்லாமல் நீரே வாழ்க்கையின் பலன்களை அறிந்து உமது நண்பருக்கும் தெரிவிக்கலாம்.

இப்புத்தகம் பல மேல்நாட்டு கீழ்நாட்டு நூல்களைப் பரிசோதித்து முக்யமான விஷயங்களைத் திரட்டி எழுதப்பட்ட ஒரு நூல்.

சோதிடத்தை விட சிறந்து, பலன்கள் என்னவென்று உள்ளதை உள்ளபடியே உரைக்கும் இப்புத்தகம் விலை ரூபா 1 4 0

**லலிதா விலாச புஸ்தக சாலை**

திருவல்லிக்கேணி, சென்னை.

THE

# Indian Railway Magazine, George Town, Madras.

The only monthly Magazine in India with the sole purpose of redressing railway grievances. Very useful to Merchants and the Public. Railway Law explained in simple language. ***Rs. THREE a Year.***

---

## "கிருஷிகன்"

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

**பத்திரிகாசிரியர்கள்:....**

(1) ராவ் பஹதூர் ஜெ. செல்வ ரங்க ராஜு

பென்ஷண்ட் விவசாய டெப்டி டைரெக்டர்

(2) J. R. ரங்கராஜு

**வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்றுதான்.**

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும், கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்' பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி.பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்' ஆபீஸ்,

"ஜகந்நாதபாக் " சைதாபேட்டை, சென்னை.

# நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

## கம்பெனி, லிமிடெட்.,

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

சர். டோராப் ஜே. டாட்டா Kt.

மூலதனம்:—

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | .... ரூ. | 6,00,00,000 |
| பதிவு செய்யப்பெற்ற ,, | .... ரூ. | 3,56,05,275 |
| வசூலான ,, | .... ரூ. | 71,21,055 |

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது:—

"நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தைக் கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமையுண்டு."

ஏஜண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டர்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜன்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சுமானேஜர்,

4, முதல் லைன் பீச், சென்னை.

அதியற்புதமான பன்னிரண்டு

# நாவல்களின் களஞ்சியம்

**"பன்னிரு மரகதங்களின் மர்மம்"** என்ற நூல் 12 அபூர்வமான நாவல்களின் களஞ்சியமாகும். 'பிரஜானுகூலன்' நேயர் ஆநந்தத்துடன் வாசிக்கத் தருகிறது. இதிலுள்ள நாவல்களின் விவரம்.—(1) மோகனராமன், (2) சாணக்கிய தந்திரம், (3) மாலதீ மாதவம், (4) கிராதார்ஜுனியம், (5) அதிர்ஷ்ட உருமால், (6) ஜோதிஷ்மதி, (7) சந்திரா, (8) சிங்காரத்தின் காதல், (9) மோஹன கல்யாணி, (10) கொடுத்தும் கெட்டபெயர், (11) திக்கற்ற இரு பெண்மணிகள், (12) மாமனுர் மாறிய விசித்திரம். **இந்த ஒவ்வொரு நாவலும் மிக்க அருமையானவை.** இத்துடன் (1) சிநேக அனுபவங்கள், (2) உலக அனுபவங்கள், (3) வடமொழித் திரட்டு, (4) நீதிலதா, (5) ஆங்கிலப் பழமொழிகள், (6) பிரபஞ்ச விலாசம், (7) மாதங்களைப் பற்றி, (8) கடிதங்களின் ரகசியம், ஆக வேறு எட்டு விஷயங்களும் கண்டறிந்து அனுபவமாய் எழுதப்பட்டிருக்கின்றன. 650 பக்கங்கள் கொண்டது. **விலை ரூபா 3.** உடனே எழுதுங்கள்.

இந்நாவல் "பிரஜாநுகூலன்" பத்திராதிபர் இயற்றியது, ஒவ்வொரு பக்கமும் அநுபவங்களும், நீதிகளும், உயரிய கற்பனைகளும் நிறைந்து வசீகரிக்கின்றது. இது ஒரு குடும்ப பொக்கிஷமாகும். எல்லாம் புதிய போதனைகளாகும்.

**பிரஜாநுகூலன் ஆபீஸ், ஸ்ரீரங்கம்.**

---

## அகில இந்திய லா ஜர்னல்

ஓர் உயரிய மாதாந்திர சட்டப் பத்திரிகை.

இப்பத்திரிகையில் ஹிந்துலா, பீனல்கோட், கான்ட்ராக்ட் ஆக்ட் (ஜமீன் ஜமீன்தார்கள் சம்பந்தமான) எஸ்டேட் லாண்டு ஆக்டு சிவில்புரோஸிஜர்கோட் (விக்ரயம், அடமானம், தானம் முதலிய விஷயங்களைப்பற்றின) டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்டு, (உண்டி, செக், புரோநோட் இவை சம்பந்தமான) நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்டு ஆக்ட் முதலிய ஆக்டுகளின்கீழ் ப்ரீவிகௌன்சில், சென்னை, பம்பாய், கல்கத்தா, ரங்கூன், அலஹபாத், லாகூர் முதலிய ஹைகோர்ட்டுகளில் தீர்மானிக்கப்படும் கேஸுகளும் அவைகளின் சாராம்சங்களும், தெளிவான தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு சட்ட வியாசங்களுடன் வெளியாகி வருகின்றன. இப்பத்திரிகை ஜமீன்தார்கள், வியாபாரிகள், வக்கீல் குமாஸ்தாக்கள், கொடுக்கல் வாங்கல் வர்த்தகர்கள், பெடிஷன் எழுதுவோர் முதலிய வியாபாரஸ்தர்களுக்கு வெகு அவசியமானது. சட்ட விஷயங்களை எளிதில் அறிந்து கொள்ளலாம். இப்பத்திரிகை மாதம் 1க்கு 64 பக்கங்களுக்குமேல் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு வெளிவருகின்றது. வக்கீல்களால் இயற்றப்பட்டு வருகின்றது. முதல் வால்யம் 1929-ம் வருஷம் எப்ரல் மாதம் முதல் ஆரம்பித்து வெளிவருகின்றது. சந்தாவிவரம், இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷசந்தா (முன்பணம்) தபால் சார்ஜ் உள்பட ரூ. 5. மற்ற இடங்களுக்கு 5.12.0. (ஒரு வருஷத்திற்கு குறைந்த சந்தா கிடையாது) ஒரு வருஷத்திற்கு ஒரு வால்யம் முடியும். மாதிரி சஞ்சிகை 0—8—0 ஸ்டாம்புகளனுப்பினுல், அனுப்பப்படும். மானேஜர்

**அகில இந்திய லாஜர்னல் ஆபீஸ், திருவள்ளூர் செங்கல்பட்டு ஜில்லா.**

(M. & S. M. Ry.)

நாம் இச்சஞ்சிகையை ஆரம்பித்ததுமுதல் இதற்குள் நமது சந்தாதாரர்கள் படிப்படியாகப் பெருகி எமக்கு ஆதரவளித்து உற்சாகத்தை யுண்டாக்கியதற்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். இன்னும் பல்லாயிரக் கணக்கில் சந்தாதாரர்கள் சேர்ந்தாலன்றி சஞ்சிகையை நஷ்டமின்றி நடத்துவது கஷ்டமென்பது நேயர்கள் அறிந்த விஷயமாதலால் ஒவ்வொருவரும் சில புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுத்து உதவிபுரியும்படி கேட்டுக்கொள்கிறோம். அப்படிச் செய்பவர்களுக்குப் பிரதி உற்சாகமுண்டாவதற்காக கீழ்க்கண்டவாறு பரிசுகள் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம். அன்பர்கள் இதை ஆமோதிப் பார்களென்று நம்புகிறோம்.

பரிசு புத்தகங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | ஒரு | புதிய சந்தாதாரைச் சேர்த்து முன்பண மனுப்புகிறவர்களுக்கு | | மாதவமணி அல்லது அமிர்தமாலினி |
| (2) | 2 | புதிய சந்தாதார்களை | ,, | வீரவலங்தா |
| (3) | 3 | ,, | ,, | கோபாலரத்னம் |
| (4) | 4 | ,, | ,, | சுகந்தபுஷ்பம் |
| (5) | 5 | ,, | ,, | கௌரீமுகுந்தன் அல்லது ஒரு வருஷ சஞ்சிகை |
| (6) | 6 | ,, | ,, | சண்பகவிஜயம் |
| (7) | 7 | ,, | ,, | நவநீதகிருஷ்ணன் |
| (8) | 8 | ,, | ,, | வைதேகி, அல்லது பத்ம சுந்தரன் அல்லது ராதாமணி |

21602

## கெட்டி சாயம்! உயர்ந்த உடை !! விலை நயம் !!!

**உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள**

# கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. செம்ரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குவதே சரி.

அளவு 18 × 2¾ முழங்கள்.

**முதல் ரகம்** விலை ரூ. 5-0-0 **2-வது ரகம்** ரூ. 4-0-0

பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

# ஜர்மன் சில்க் புடவைகள்

**சாதா:** மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-0-0
ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

**கோட்டடி:** கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக் கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 × 2¾ விலை ரூ. 11-4-0
ரவிக்கை 1 முழம் 0-12.0

மேற்படி பிளேன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0.0 அதிகம்.

குறிப்பு....உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

**ஸிட்டி கேசவுச் சாலை,**
65, அரமனைக்கார வீதி,
ஜி. டி. சென்னை.

**ஏஜண்டுகள் தேவை.**

# "ஜகன்மோகினி" யில்
## வெளிவந்த நாவல்கள்.

மலர் 1. ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் எழுதிய

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காளிங்கராயன் கோட்டை ரகசியம் (2-பாகங்கள்) | ரூ. | 4 | 0 | 0 |
| மலர் II. | விலாஸவதி (2-பாகங்கள்) | ரூ. | 3 | 0 | 0 |

ஸ்ரீமான் அ. முத்துகிருஷ்ணன் எழுதியவை

| | | | | |
|---|---|---|---|---|
| கனகசபை | ரூ. | 1 | 8 | 0 |
| கோகிலம் | ரூ. | 0 | 6 | 0 |

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியவை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலர் III. | வைதேகி (2-பாகங்கள்) .... | ரூ. | 2 | 8 | 0 |
| மலர் IV. | பத்மசுந்தரன் (2-பாகங்கள்) ... | ரூ. | 2 | 8 | 0 |
| மலர் V. | ராதாமணி (2-பாகங்கள்) ... | ரூ. | 2 | 8 | 0 |
| மலர் VI. | நவநீதகிருஷ்ணன் ... | ரூ. | 2 | 0 | 0 |
| | சண்பக விஜயம் .... .... | ரூ. | 1 | 12 | 0 |
| | கௌரீ முகுந்தன் .... | ரூ. | 1 | 12 | 0 |
| | சுகந்தபுஷ்பம் .... | ரூ. | 1 | 0 | 0 |
| | கோபால ரத்னம் ... | ரூ. | 0 | 14 | 0 |
| | வீரவஸந்தா .... | ரூ. | 0 | 8 | 0 |
| | மாதவமணி .... .... | ரூ. | 0 | 3 | 0 |

"ஜகன்மோகினி" சந்தாதார்களுக்கு குறைந்த விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| வைதேகி ... ... | ரூ. | 2 | 0 | 0 |
| பத்மசுந்தரன் .... .... | ரூ. | 2 | 0 | 0 |
| ராதாமணி .... .... | ரூ. | 2 | 0 | 0 |
| நவநீதகிருஷ்ணன் .... .... | ரூ. | 1 | 12 | 0 |
| சண்பகவிஜயம் .... .... | ரூ. | 1 | 8 | 0 |
| கௌரீமுகுந்தன் — .... | ரூ. | 1 | 8 | 0 |

"ஜகன்மோகினி" ஆபீஸ்

26, தோடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

---

இனாம் தபாற்செலவு இனாம்

இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்புகிறவர்களுக்கு "போலீஸ் கிலி போதிராயர்," "ராவ்பகதூர் ரஸகுல்லா சாஹிப்" என்னும் இரண்டு நாவல்கள் அனுப்பப்படும்.

தமிழ் நாவல்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதனசிங்கர் | ரூ. 1 | 0 | 0. | மர்மமுகி | ரூ. | 0 | 12 | 0 |
| சுந்தரவதனி | ரூ. 0 | 12 | 0 | வஸந்தசமுத்ரம் | ரூ. | 0 | 12 | 0 |
| மஞ்சுளா | ரூ. 0 | 6 | 0 | அமிருதமாலினி | ரூ. | 0 | 4 | 0 |

வத்[illegible]ம்பெனி, திருவல்லிக்கேணி.

# அமிர்தாஞ்சனம்




எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

**40 வருஷங்களாக**

**"ஜகன்மோகினி" யாய் விளங்குவது**

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.